# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA.

1876,ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

Telephone: No. 300.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 26-ம் இலக்கம்


## தேவதாயாரும் லூர்துபதியும்


— மேன்மைதங்கிய மதுரை அதிமேற்றிராணியார் —


### I நமது நம்பிக்கை

இந்தயுகம் மாமரியின்யுகம் என்கிறார்களே. வாஸ்தவம். எக்காலத்தில் திருச்சபைக்கு விசேஷநெருக்கடி ஏற்படுகிறதோ, அக்காலத்தில் அதற்குப் பரிகாரமாகச் சர்வேசுரன் சமயோசிதமான சகாயங்களைத் தயாரித்துவைத்துச் சமாளிப்பது வழக்கம். எப்பொழுதாவது நரகநாகமானது படம்எடுத்துஆடிச் சீறிவிழுந்து விஷம்கக்குகிறதோ, அப்பொழுது வீரத்தாய்தோன்றி அதன்கர்வத்தை அடக்கித் தலையைநசுக்கிப் போடுகிறாள். போர்அணியாக வகுக்கப்பட்ட படையைப்போல் பயம் வருவிக்கத் தக்கவளாயிருக்கின்றாள் மாமரி அல்லவா? (Cant. 6 : 3). எதிரி எந்தவேஷம் போட்டாலும், எந்தச்சூதுசெய்தாலும், எந்தஆயுதங்களைக் கையாண்டாலும் அவைகளையெல்லாம் வீணாக்கித் தொலைக்க வல்லவள் மாமரி. திருச்சபையின் சரித்திரம் இதற்கு அத்தாட்சி அன்றோ?

ஆனால், எத்துணை அதிகாரத்தோடு கொடுமைமிகுந்த லூசிப்பேயை எதிர்த்துப் போராடிச் சிதறடிக்கிறாளோ அத்துணை தயாளத்துடன் அறியாமையினாலோ, பலவீனத்தினாலோ ஏமாந்து சிக்கிக்கிடக்கின்ற மானிடரைத்தேடித் தேற்றிஇரட்சிப்பதிலும்அலுவலாயிருக்கிறாள் மாமரி. எவ்வாறு நல்லசமாரியன் கள்வர்கையில் அகப்பட்டு, காயப்பட்டு, குற்றுயிராய்க் கிடந்து தவித்திருந்த மனிதனைக் கண்டு இரக்கங்கொண்டு சிகிச்சைசெய்து தூக்கிக்காப்பாற்றினாரோ, அவ்வாறே கருணைநிறைந்ததேவதாய் பாவிகளைத்தேடிப் பராமரித்துக் காப்பாற்றுகிறாள். அன்புததும்பும் உள்ளம் தாய்உள்ளம். துன்புறும்மக்களுக்கு உதவிபுரிய ஓடிவருவது தாய்க்குணம்.

**லூர்துநகரின் அற்புதம்**

லூர்துதிருசேத்திரத்தில் கடந்த ஓர்நூறாண்டாக நடந்துள்ள நிகழ்ச்சிகள்எல்லாம் இந்தஉண்மையை நன்றாய் எடுத்துக்காட்டுகின்றன. அதுபோல் சிறந்த சான்று வேறுண்டா?

வருடாவருடம் லூர்துதிருஸ்தலத்தில் கூடிவணங்குகிற திருயாத்திரிகர்கள் சராசரி 20 லட்சம்பேர். இவர்களில் பத்தாயிரம்பேர் வியாதியஸ்தர். அற்புதமாக வியாதியினின்று குணமடைகிறவர்கள் வருடத்திற்கு ஏறக்குறைய 150பேர். லூர்துஅன்னையின் கருணைதான் என்னே!

ஆனால், உடல்நோய்கள்தீரும் அற்புதங்களைவிட அங்குநடக்கும் ஞான அதிசயங்கள் அதிகம். அங்கு கூடுகிறவர்களில் அநேகர் தேடுவது மனச்சாந்தி, ஆறுதல், ஞானவாழ்வில் முன்னேற்றம், சந்தேகங்களில் தெளிவு, சோதனைகளில் உறுதி, மனமாற்றம். அத்தனைபேர்களினதும் நம்பிக்கை வீணாய்ப்போனதாகக் கேள்விப்படவில்லை.

லூர்துநகர் மேற்றிராணியாரான மகாவந். தேயாஸ்ஆண்டவர் கூறுவதுபோல, "லூர்துநகர் பல்லாயிரம் புதுமைகளின் இருப்பிடம். இரவும்பகலும் ஒருவரும்காணாத கேளாத கடவுளின்மகிமை நிறைந்துவிளங்கும் புதுமைகள் யாத்திரையாகவரும் மக்களின் உள்ளங்களில் சதா நடந்துகொண்டே இருக்கின்றன......"

இன்னும், "லூர்துநகரின் சிறந்தஅற்புதம் என்னவெனில், குணமடையாத பிணியாளரின் முகத்தில்விளங்கும் அமைதியும், மலர்வும், பணிவுமே" என்கிறார் ஒரு லூர்துபதி யாத்திரைக்குருவானவர்.

இதிலிருந்து லூர்துமாதாவின் நிகரற்றஅன்பையும், வல்லமையையும் யூகித்துக்கொள்ளலாம். எனவே, கடந்த நூறாண்டளவாக அத்திருஸ்தலத்துக்குச் சென்றவர்களுக்கோகணக்கில்லை என்பதில் வியப்பில்லை. இப்புனித ஆண்டிலோ ஒருகோடிக்குக் குறையாமல் திருயாத்திரிகர்கள் அதனைச் சந்திப்பார்களென எதிர்பார்க்கப்படுகிறது. அத்தனைபேரினதும் நோக்கம்என்ன? ஒரேஆசை என்ன? நேசஅன்னையைச்சந்தித்து, வணங்கித் துதித்து, அவளது அருமைஆசீரைப் பெற்றுவரலாம் என்பதே அவர்களை இழுத்துக்கொள்ளும் ஆசை.

இதுமட்டுமா? மெய்யான வணக்கம் முக்கியமாய் எதிலே காணப்படும்? தாயின் பொன்மொழிகளை ஆவலுடன் கேட்டுச் சொற்படி ஒழுகுவதே உற்ற வணக்கத்தின் அறிகுறியாதலால் வந்தவர்கள்மனமாற்றமில்லாமல், உறுதியான பிரதிக்கினையில்லாமல் திரும்புகிறவர்கள் அல்ல.

நாமும் லூர்துநாயகியைத் தோத்திரித்துப் பாராட்ட ஆசிக்கிறோம். நாமும் அவள்சொற்படி நடக்கத்தயாராயிருக்கிறோம். ஆகவே, லூர்துஅன்னை நமக்குப்புகட்டிய படிப்பனைகளைச் சற்றுக்கவனிப்போம்.

### II மாதாவின் பொன்மொழி

பரலோகதாய் சிறுமி பெர்னதெத்அம்மாளைப் பார்த்துச் சொன்ன முக்கியமான வார்த்தைகளை நினைவு கூருங்கள்: "இவ்வுலகில்அல்ல, மறுவுலகில் உன்னைப் பாக்கியவதி ஆக்குவேன்என்று உனக்கு வாக்களிக்கிறேன்." (18 மாசி)

"செபம் செய்; பாவிகளுக்காகவேண்டிக்கொள்." (21 மா.)

"நீரூற்றிற்குச்சென்று அள்ளிப்பருகு; கழுவு; அங்கேயுள்ள புல்லைச் சாப்பிடு." (25 மாசி)

"தவம், தவம், தவம்; பாவிகளுக்காகத் தரையைமுத்திசெய்." (26 மாசி)

"குருமாரிடஞ்சென்று இங்கே ஒருஆலயம்கட்டிச் சுற்றுப்பிரகாரமாக வரும்படி சொல்." (8 பங்குனி)

"நாமே அமலோற்பவம்; நமக்கு ஒருகோவில் வேண்டும்." (25 பங்குனி). இவ்வார்த்தைகளில் அடங்கியுள்ள பொருள் என்ன?

விசுவாசம், பக்தி, தியாகம், பிறர்சிநேகம் இவைகள்தான் புனிதமான கிறீஸ்துவவாழ்விற்கு இன்றியமையாத சாதனங்களெனத்தெரிகிறது. கன்னித்தாய் நமக்குப்புகட்டிய நற்போதனையின் முக்கியமான அம்சம் இதுவே. சகலகிறீஸ்துவர்களும் விசேஷமாய் மாதாவின்சபையார்சகலரும், எல்லாச்சேவாசங்க வீரர்களும் இதையே தங்கள் சீவியத்தின் இலக்காகவும், தங்கள் நடத்தையின் ஒழுக்கமாகவும் கொண்டு பரிசுத்தரும், உத்தமருமாக இவ்வுலகில் விளங்க வேண்டும்.

**விசுவாசம்**

மரியன்னை லூர்துகெபியில் காட்சிகொடுத்த காலத்திலே பிரான்ஸ்தேசத்திலும், மற்றும் நாடுகளிலும் அவிசுவாசம்என்ற தொற்றுநோய் ஒருபுறம், விஞ்ஞானம்என்ற போர்வையில் மனதுகளைக்குழப்பி ஏமாற்றிய நாஸ்திக லோகாயதத்துவம் மற்றொருபுறம். இவைகளால் சத்தியவேதம், கடவுள்பக்தி, ஒழுக்கவாழ்வு முதலியவை சீர்குலைந்து வருவதைக்கண்டு சொல்லிலடங்காத துயரத்தில் ஆழ்ந்தாள் லூர்துஅன்னை. இத்துயரத்தின் அடையாளம் அவளது அழகிய முகத்தில் மேலிட்டது. நாஸ்திகர் பரமஞானிகளைப்போல் பாசாங்குபண்ணி மேடையில் ஏறிப்பிரசங்கித்து. கடவுள்ஏது, மோட்சம்ஏது, புண்ணியம்ஏது, யார்கண்டது என்றெல்லாம் பிதற்றுகிறார்கள். என்ன மதியீனம்! என்ன அகங்காரம்!

அதற்குப்பதிலாக, "கடவுள் உண்டு" அவரை முழுமனதோடு அங்கீகரித்து உண்மையாக வழிபடவேண்டுமென்றும், அவரிடத்திலிருந்து ஆத்தும, சரீரநன்மைகளையெல்லாம் இரந்துமன்றாடவேண்டுமென்றும், அவருடைய சித்தத்துக்குப்பணிந்து ஒழுகுவதே மனிதனின் முக்கியமான கடமைஎன்றும் மாதா பரலோககாந்தியோடு தோன்றிப்போதிக்கின்றாள். அன்றியும் "சத்தியத்துக்குத்தூணும், அடிநிலையுமாகிய திருச்சபை"யை ஏற்றுக்கொண்டு, அதன் தவறாத படிப்பினைகளைத் தலைமேற்கொண்டு நடந்து நற்கதியைஅடையவேண்டுமென்ற உண்மையையும் தெளிவாய் எடுத்துரைக்கிறாள். "யேசுவின் தாய் சென்மபாவமில்லாமல் உற்பவித்தாள்" என்பதை வேதசத்தியமாக வற்புறுத்திப் போதிக்கிறது திருச்சபை. "நாமே அமலோற்பவம்" என்றுசொல்லி ஏகோபித்துத் தெரிவிக்கிறாள் தேவதாய். இவ்வார்த்தையைக் கத்தோலிக்கஉலகம் மிக்கமகிழ்வோடு வரவேற்றது. இவ்வார்த்தை நமது விசுவாசத்தையும், திருச்சபையின்மேலுள்ள பற்றுதலையும் மிகவும் திடப்படுத்தத் தக்கது.

சேவா சங்கத்தாரிடத்தில் விளங்கவேண்டிய குணாதிசயங்களில் உயிருள்ள விசுவாசம்ஒன்று. விசுவாசப்பரப்புதல்அல்லவா திருச்சபையின் முக்கியமான அலுவல். இவ்வலுவலில் பங்கு எடுக்கவேண்டுமென்பதே சேவா சங்கத்தாரின் கருத்து. ஆகவே, விசுவாச தீபத்தை உயர்த்திக்கொண்டு அஞ்ஞான இருளையும், நாஸ்திகபிதற்றலையும் நிவிர்த்தி செய்து ஞானஒளியின் அருமையைக்காட்டிப் பிரஸ்தாபம்பண்ணவேண்டும்.


[வரும்]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வினை விதைத்தவன் வினை யறுப்பான்

ஹங்கேரியின் முன்னைநாள் பிரதமர் இம்றெநாகி ஓர்விடுதலைத்தியாகி ஆகுவாரென்று அப்போது எவரும் கருதியிருக்கமாட்டார்.

பார்த்தால் ஒரு பிரான்ஸிய பேராசிரியர்போல் காணப்படுவார் இம்றெநாகி. ஆனால், அவர் இன்று இவ்வுலகில் இல்லை—கொல்லப்பட்டுவிட்டார்.

அவர் சாதனையில் ஒருஅரசியல்வாதியாக விளங்கினர். கம்யூனிஸ்தர்களின் வழக்கமான திருகுதாளங்கள் யாவையும் பரீட்சித்துக் கம்யூனிஸ்தவழியில் சென்றவர்தான் இம்றெநாகி.

எந்தத் திருகுதாளங்களைப்பாவித்து உச்சிக்கு வந்தாரோ அதேதிருகுதாளங்கள்தான் இன்று அவரைவிடுதலைத்தியாகியாய், வீரபுருஷராய் ஆக்கிவிட்டன.

ருஷிய "களைஎடுப்பு" ஆயுதத்துக் குப்பலிஆகிவிட்டார் இம்றெநாகி. ஹங்கேரியமக்களின் சுயநிர்ணயஆசையின் உருவமாகிவிட்டஅவர் ஹங்கேரியமக்களின் விடுதலைஇயக்கத் தலைவராகவிருந்தவர்.

அவருடைய பூர்வவாழ்க்கைச் சரித்திரத்துக்கும், கம்யூனிஸ்ததலைவர்களின் வாழ்க்கைச்சரித்திரத்துக்கும் எந்தவேறுபாடும் கிடையாது.

தென் ஹங்கேரியிலுள்ள கபோஸ்வார் என்றஇடத்தில் விவசாயிஒருவருக்கு மகனுகப்பிறந்தார் இம்றெநாகி. ஆரம்பபாடசாலைஒன்றில் தனதுகல்வியை முடித்துக்கொண்டபின் இரும்புக்கொல்லர் ஒருவரிடம்வேலைகற்க ஆரம்பித்தார். பிறகு தொழிற்சங்கஇயக்கத்தில் சேர்ந்தார்.

அப்பொழுதே முதலாவது உலகயுத்தம்மூண்டது. அப்போரின் விசித்திரபோக்கினுல் இடதுசாரிஇயக்கத்தில் இவரும் ஒருமுக்கிய மனிதானுர்.

1915-ம்ஆண்டு ஆஸ்திரிய-ஹங்கேரிய இராணுவத்தில் இவரும் ஒருவராய்ச்சேர்ந்தார். இத்தாலிய போர்முனையில் காயப்பட்டார்.

கிழக்குப்போர்முனையில் இவர் ருஷியர்களால் சிறைபிடிக்கப்பட்டார். ருஷியர்கள் இவரைச் சைபீரியபாலைவனத்துக்கு அனுப்பிவைத்தனர்.

ருஷியாவில் ஸார்மன்னரின்ஆட்சி விழ்ந்தது — இல்லைவீழ்த்தப்பட்டது. இம்றெநாகியும் புரட்சிவாதிகளுடன் சேர்ந்து ஸார்மன்னருக்கு எதிராகப்போரிட்டார். கம்யூனிஸ்தகட்சியில் சேர்ந்தார். அத்துடன் ருஷியப்பிரசையாகவும் மாறிவிட்டார்.

ருஷியஐப்பசிப்புரட்சி அங்கிருந்து ஹங்கேரிக்குப்பரவியது. ஹங்கேரியில் 1919-ம்ஆண்டு முதலாவதுகம்யூனிஸ்த அரசாங்கம் ஏற்பட்டபோது இம்றெநாகியும் அதில் ஒருசில்லறைப்பதவியில் அமர்ந்தார். அவ்வரசாங்கம் கவிழ்ந்தபோது நாகி பரீஸ்நகருக்குத் தப்பியோடிவிட்டார்.

இரண்டுவருடங்கள் சென்றபின் இவர்மீண்டும் நாடுதிரும்பினுர். அப்போதிருந்த அட்மிறல்ஹார்த்தியின் அரசாங்கம் இவரை 1927-ம்ஆண்டு கைதுசெய்து சிறையில்தள்ளியது.

ஆனுல், இவரோ சிறையிலிருந்து தப்பிவிட்டார். ருஷியாவுக்குப்போய் மஸ்கோசர்வகலாசாலையில் விவசாயத்தொழில் கற்றுக்கொண்டார். தான் கற்றகல்வியின்பயனுக இவர் ஒருகூட்டுப்பண்ணையின் மனேஜரானுர்.

இரண்டாவது உலகமகாயுத்தம் உண்டானபோது இம்றெநாகி ஹங்கேரிய பிரசாரவேலைக்கு முதல்வராக்கப்பட்டார். "புதியகுரல்" என்ற ஒரு கம்யூனிஸ்த புத்தகத்தையும் எழுதி வெளியிட்டார்.

ருஷியஅரசாங்க ஆதரவில் இயங்கிவந்த கோசுத்வானெலியிலும் இம்றெநாகியின்குரல் தினந்தோறும் ஒலித்துக்கொண்டுவந்தது. அவ்வானெலிக்கு இவரேஆசிரியராகவும், பிரதான பேச்சாளராகவும் இருந்துவந்தார்.

1944-ம்ஆண்டு ருஷியசெம்படை ஹங்கேரிக்குள் நுழைந்தது. நாகியும் தனதுசொந்தநாட்டுக்குத் திரும்பினுர். யுத்தகாலத்துக்குப்பிறகு ஹங்கேரியில்ஏற்பட்ட முதலாவது சமாதானஅரசாங்கத்தில் இம்றெநாகி விவசாயமந்திரியானுர்.

பிறகு உள்நாட்டுமந்திரியானுர். சிறுகாணிச்சொந்தக்காரர்களை எல்லாம் ஒழித்துக்கட்டும் "களைஎடுப்பு" 1947-ம்ஆண்டு ஆரம்பமானபோது நாகியே அந்தக் "களைஎடுப்பு"க் கைங்கரியத்துக்குப் பொறுப்பாகஇருந்தார்.

மாஷல் ரிற்றோவை ருஷியா கைவிட்டுச்சென்ற சமயத்தில் லாஸ்லோராஜக்முதலிய கம்யூனிஸ்ததலைவர்கள் கொல்லப்பட்டனர். அந்தச்சமயத்திலும் கம்யூனிஸ்த மேலிடத்தார் நாகியின்மீது கைவைக்கவில்லை

ரிற்றோவின் அடிவருடி, அமெரிக்காவுக்கு வேவுபார்க்கிறவர் என்றெல்லாம் குற்றஞ்சாட்டித்தான் கம்யூனிஸ்தகட்சியின் பொதுக்காரியதரிசியாக இருந்த லாஸ்லோராஜக் கொல்லப்பட்டார். அப்போதெல்லாம் இம்றெநாகியின் பேரில்அவர்கள் சந்தேகப்படவில்லை.

இம்றெநாகியோ 1953-ல் ஹங்கேரியின் பிரதமமந்திரியானுர். ருஷியாவில் மலெங்கோவ் பதவியிலிருந்து கீழே விழுந்ததும் இம்றெநாகி ஒருவலதுசாரி என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆகாதமருமகள் கைபட்டாலும் குற்றம்; கால்பட்டாலும் குற்றம்என்ற கதைபோல நாகிமீது கண்டதெற்கெல்லாம் குற்றஞ்சாட்டப்பட்டது.

திடீரென ஒருசெய்திவந்தது. நாகிக்குச் சுகமில்லையென்று. அதன் மேல் அவரைப்பற்றி எதுவும்வெளிவரவில்லை.

ஹங்கேரியபுரட்சி நடக்கும்வரை நாகியைப்பற்றி எதுவும் அறிந்துகொள்ள முடியாதிருந்தது.

இவர் தனதுநாட்டுமக்களுக்கு மிகவும்வேண்டியவராய் இருந்தார். ஒருகாலஅளவுக்கு ருஷியாவுக்குத்தானும் வேண்டியவராயிருந்தார்.

புரட்சிஇயக்கத்தை ஒருவரம்பிற்குள்வைக்க உதவும்ஆட்களைக் கைக்குள்போட ருஷியாவிரும்பியபோது போலாந்தில் கோமுல்காவையும், ஹங்கேரியில் இம்றெ நாகியையும்ருஷியா பயன்படுத்தியது.

ஹங்கேரியமக்கள் ருஷியாவின் பிடியிலிருந்துவிலகித் தனியான ஒருவழியைப் பின்பற்றஎண்ணிப் புரட்சியொன்றை நடத்தினர். ஆனுல், நாகி அதில்தோல்விஅடைந்தார்.

ருஷியா தனதுசெம்படைகளை ஹங்கேரிக்கு அனுப்பிவைத்தது. நாகியோ யூகோசிலேவிய தூதராலயத்தில்போய் அடைக்கலம்புகுந்தார்.

நாகிஎதற்கோ, என்னகாரியத்திற்கோ யூகோசிலேவியதூதராலயத்திலிருந்துவெளிக்கிளம்பினுர்; தன்சொந்த விருப்பப்படி ருமேனியாவுக்குச்சென்றுவிட்டார்என்று கூறப்பட்டது.

இம்றெநாகியை நீதிமன்றத்துக்கு இழுத்துத் தண்டனைகொடுக்க மாட்டோமென்று ருஷியர்கள் உறுதிமொழி அளித்தபின்பே யூகோசிலேவியாநாகியை ருஷியாவிடம் ஒப்படைத்ததென்று மாஷல் ரிற்றோ பறைசாற்றினுர்.

ஹங்கேரியின்விடுதலை இயக்கத்தை மீண்டும் தலைமைதாங்கிநடத்த இம்றெநாகி மீண்டும்வருவார் என்றுதான் ஹங்கேரியமக்கள் நம்பிக்கொண்டு இருந்தனர். அந்தநம்பிக்கைக்கு இப்போது இடமில்லை.



# பல தேசங்களில்

## இரட்டைப்பிள்ளைகளான குருமார்

அயர்என அழைக்கப்படுகின்ற சுதந்திர அயர்லாந்திலே கில்கென்னி நகரிலுள்ள அர்ச். கியேரான் குருமடத்தில் மூன்றுசோடு இரட்டைப்பிள்ளைகள் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றிருக்கிறுர்கள். இவர்களிலே வண. யோசெவ் வெறெகர் — தோபியாஸ் வெறெகர் என்ற இரட்டைப்பிள்ளைகள் இருவரும் சென்றமாதம் ஒருங்கே குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றனர். 1945-ம் ஆண்டு வண. ஜெறேமியா ஓ' கொனர் — வண. யோசெவ் ஓ' கொனர் என்ற இரட்டைப்பிள்ளைகள் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றனர். இவர்கள்தற்போது இங்கிலாந்திலே தொண்டாற்றி வருகின்றுர்கள். 1944-ம் ஆண்டு வண. நிக்கலஸ் ஹியூஸ் — வண. மாட்டின் ஹியூஸ் என்ற இரட்டைப்பிள்ளைகள் குருத்துவாபிஷேகம் செய்யப்பெற்றனர். இந்தக் ஹியூஸ் குருசகோதரர்களின் மற்றும் இருசகோதரர் குருமாராயிருக்கின்றனர். இவர்களில் வண. தோமஸ் ஹியூஸ் சுவாமியார் இங்கிலாந்திலும், வண. ஜேம்ஸ் ஹியூஸ் சுவாமியார் ஆஸ்திரேலியாவிலும் தொண்டாற்றி வருகின்றுர்கள்.

## தருமப்பொருளுக்கும் வரிவிதிக்கும் கம்யூனிஸ்த தருமம்

கம்யூனிஸ்த ஆட்சியாலே கஷ்டமடைந்து பட்டினியால்வாடும் போலிஷ் மக்களுக்கு ஐக்கிய அமெரிக்க தேசத்திலிருந்து அனுப்பிவைக்கப்பெற்ற கஷ்டநிவாரண பொருட்களுக்குப் போலிஷ் கம்யூனிஸ்தஅரசாங்கம் வரிவிதித்தமையாலே அவைகள் தொன்கணக்கில சேதமடைந்துபோகின்றன. அவ்விதம் வரிவிதித்ததையிட்டுப் போலாந்தின் திருச்சபை மேலதிகாரியான கருதினல் விசின்ஸ்கிஆண்டவர் போலிஷ் அரசாங்கத்தைக் கண்டித்திருக்கின்றுர். அன்றுதினம் அவர் மாணவர்களுக்கு நிகழ்த்திய ஓர் சொற்பொழிவிலே: "சிறைச்சாலையிலிருந்து நாம் விடுதலை செய்யப்பெற்றபின் இந்தக் கஷ்டநிவாரண வேலைக்கென்றே நம்மை அர்ப்பணஞ்செய்தோம்; எல்லாப் பக்கங்களிலுமே உடன்பாட்டைக் கண்டுகொண்டோம்; பிறநாடுகளிலிருந்து அனுப்பப்படுகின்ற நன்கொடைகளுக்கெல்லாம் துறைமுகவரி விதிக்கப்படுவதில்லை; விதித்தாலும் மிகவும் குறைவாகவே விதிக்கப்படுகிறது; அமெரிக்காவிலுள்ள போலிஷ் ஸ்தாபனங்களிலிருந்து வந்திருக்கின்ற சகல பொருட்களுக்குமே சென்ற பங்குனிமாதமுதல் துறைமுக வரிவிதிக்கப்பட்டு, அதனுல் நமது கஷ்டநிவாரண வேலைகளுக்குத் தற்போது பங்கம் ஏற்பட்டிருக்கிறது; வரிவிதிக்கப்பட்ட காரணமாக இந்தநன்கொடைகள் போலிஷ் துறைமுகங்களிலே தொன்கணக்கில் கிடக்கின்றன" எனக் கூறியிருக்கின்றுர். கம்யூனிஸ்த ஆட்சியின் தருமசிந்தைதான் இருந்தபடிஎன்னே!

---

மஸ்கோவழியிலிருந்து சற்றுத் தள்ளிநடந்தாலும் அவர்களை உடனே "களைஎடுத்து" விடுவதே ருஷியாவினதும், சீனுவினதும் கொள்கையாயிற்று. அந்தக்களைஎடுப்புக்கு இன்று நாகி பலியாகிவிட்டார்.

ஒருகாலம் மற்றவர்களைக்களைஎடுத்து வந்த இம்றெ நாகி இன்று அதே களைஎடுப்பிற்குப் பலியாகிவிட்டார். வினைவிதைத்தவன் வினைஅறுப்பான் என்பதற்கு இம்றெ நாகி உதாரணமாகிவிட்டார்.

## நாகி படுகொலையின் மர்மம் யாது?

இந்திய சோஷலிஸ்த கட்சியின் முன்னைநாள் பொதுக்காரியதரிசியான திரு. ஜயப்பிரகாஷ் நாராயணன் ஹங்கேரிய நிலைமைபற்றி அன்று லண்டன் நகரிலே பத்திரிகைகளுக்குவிடுத்துள்ள ஓர்அறிக்கையிலே தெரிவித்திருப்பது வருமாறு: "ஹங்கேரிய முன்னைநாள் பிரதமர் இம்றேநாகி, ஜெனறல் மலெற்றர் என்பவர்கள் படுகொலைசெய்யப்பட்டமையானது மேற்கு உலகுக்கு வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியது மட்டுமன்றி, ருஷிய நடவடிக்கைகளில் நம்பிக்கையின்மையையும் பலப்படுத்தியுள்ளது. தூரகிழக்கிலும், ஆபிரிக்காவிலும் இதேஉணர்ச்சி இடம்பெற்றுள்ளதென்றுல் மிகையாகாது. ருஷியசாம்பிராச்சியத்தின் அந்தரங்க நிலைமை அபாயகரமாய் இருக்கவேண்டும். நிலைமைமோசமாய் இல்லாவிடின் இத்தகையபயங்கர படுகொலைகளைச்செய்ய ருஷியர்கள் முற்பட்டிருக்கமாட்டார்கள். லட்சியமின்றி எதுவுமே நடைபெறுது. ஒருகால் ருஷிய சாம்பிராச்சியத்தின் எதிர்காலமே லட்சியமாயிருக்கலாம். ருஷிய ஆட்சியில் சுதந்திரம், தேசியம் என்ன நிலையில் இருக்கின்றனஎன்பதற்கு இப்படுகொலைச்சம்பவம் ஓர்எடுத்துக்காட்டாகும், மனிதவர்க்கத்தைத் தனது எதிரியாக்கும் ஓர்பெருந்தியாகத்தையே ருஷியா இதன்மூலம் செய்திருக்கிறது.

● வானமண்டலத்திலே 2 லட்சத்து 38 ஆயிரம் மைல் உயரத்துக்குப் பறந்துசென்று சந்திரமண்டலத்தைத் தாக்கக்கூடிய "றெக்கெற்" எனப்படும் ஆகாயபாணம்ஒன்றைஅனுப்ப வருகிற ஐப்பசி அல்லது கார்த்திகையிலே அமெரிக்கா அநேகமாய் முயற்சிக்குமென்று வாஷிங்ரன் நகரில் விஷயமறிந்தவட்டாரங்கள் சமீபத்தில் கூறியுள்ளன. இந்த ஆகாயபாணம் பலகட்டங்களாகப்பறந்து சந்திரமண்டலத்தைப் போய்ச்சேருமாம்.

● கனடாதேச அன்ரிக்கோனிஷ் சர்வகலாசாலைமாணவர்கள் ஒன்றுசேர்ந்து ஏறக்குறையத் 900பவுண்சேகரித்து ஜோர்ஜ் மிவிச்சிகிஎன்ற தங்கள் உடன்மாணவ இளவரசருக்கு உபகரித்திருக்கிறுர்கள். இந்தஉடன்மாணவர் கினியாநாட்டிலுள்ள ஓர்சிற்றரசனின் புதல்வர். இச்சிற்றரசன் ஆட்சிசெய்யும் கிருபுசாதியாருக்கென ஓர்கத்தோலிக்கபாடசாலையை அமைப்பதற்கு உதவியாகவே இந்தப்பணம் உபகரிக்கப்படலாயிற்று.

● ஒல்லாந்திலே ஒவர்வீன் நகரபரமதிரித்துவத்தின் புதியகோவிலிலே சமீபத்தில் ஆபிரிக்க காஞநாட்டைச்சேர்ந்த குமாஷிநகர அந்திரே வான்டென் புறெச்மேற்றிராணியார் தமது உடன்பிறந்த சகோதரரான வண. ஜாக்குவெஸ் வான்டென் புறெச்பிறதருக்குக் குருப்பட்டம் அருளலாயினர். புதியகுருவானவர் தமதுசகோதரரின் மேற்றிராசனத்திலே திருத்தொண்டாற்றுமாறு விரைவிலே அங்குசெல்ல ஆயத்தப்படுகின்றுர்.

● பத்திரிகைகளிலே தற்கொலைகள் பற்றிய அறிக்கைகள் வெளியிடுவதை "ஒசேர்வாத்தோறே றோமானோ" என்ற வத்திக்கான்பத்திரிகை வெகுவாகக் கண்டித்திருக்கிறது. தற்கொலைகள் பற்றிய செய்திகளைப் பத்திரிகைகள் பிரசுரஞ்செய்வதானது ஏனையவர்களும் தங்களைக்கொலைசெய்யத் தூண்டுவதாலே அச்செய்திகளை நிறுத்திவிடவேண்டுமென அது கேட்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்காய வரத்தர்களாகத் திகழும் சிட்டர்களின் வரலாறு

கிறிஸ்துநாதரின் திருக்காயங்கள் அற்புதமாகத் தங்கள்சரீரங்களிலே பதியப்பெற்ற அர்ச்சிய சிட்டர்களையும், ஏனையவர்களையும் அவர்கள்பட்டனுபவித்த உக்கிர வேதனைகளையும் டக்றர்இம்பேட் என்னும் பண்டிதர் நெடுநாள் ஆராய்ச்சிசெய்து, அதன்விளைவாய்த் தற்போது ஐந்துதிருக்காயங்கள் பதியப்பெற்றவர்களாய் உயிர்வாழ்ந்திருக்கும் ஓர் ஜேர்மன்மாதுவான தெரேசா நியூமனையும், ஓர் இத்தாலிய கன்னியாஸ்திரியான ஸிஸ்றர் எலேனு அயெல்லோவையும், ஓர் இத்தாலியகுருவரான வண. பியோசுவாமியாரையும் இக்கால உதாரணமாக எடுத்துக்காட்டியிருக்கின்றார். அவர்கள்எல்லோரதும் நாமங்களைத் தொகுத்து அவர் வெளியிட்டிருக்கும் இடாப்புஒன்றிலே, 13-ம்நூற்றாண்டுக்குமுன் அப்படியான ஒருவரும் அறியப்படவில்லையென உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

அசிஸிநகர் அர்ச். பிரான்சிஸ்குவே அவர் முதன்முதலாகக் குறிப்பிட்டிருக்கும் ஐந்துகாய வரத்தராவர். அவரில்உண்டான திருக்காயங்கள் கரங்களிலும், பாதங்களிலும் புண்ணோடு தழும்புள்ளமாம்சங்கள் ஆணிகளைப் போன்றிருக்க, அவற்றின் ஒரு பக்கம் ஆணியின்கருகிய தலைப் பாகத்தையும், மறுபக்கம் அதன் நீடிய கூர்ப்பாகத்தையும் பிரதிபலிக்க, அவைகள்வளைந்து தோலைஇறுகப்பிடித்தவண்ணம் இருந்தன. அர்ச்சியசிட்டரில் விளங்கிய தாழ்மையானது அவரது சீவியகாலத்திலும், மரணத்தின் பின்னரும் அவரின் சகோதரர்களில் பெருந்தொகையினர் அதிசயம்விளைக்கும் இந்தக் காயங்கள்இருப்பதைத் தங்கள் சொந்தக்கண்கொண்டு பார்ப்பதைத் தடைசெய்யமுடியாதிருந்தது. இந்த உண்மை அவர் காலத்து ஒருதொகையான சரித்திராசிரியர்களால் உறுதியாக்கப்பட்டிருக்கிறது. அர்ச். பிரான்சிஸ் அசீஸியார் திருக்காய வரம் பெற்றதிருநாள் புரட்டாசிமாதம் 17-ந்திகதி கொண்டாடப்படுகிறது.

தெய்வச்செயலால் — அதாவது, தேவானுக்கிரகத்தால் உண்டானவையென்று தாம்நம்புவதற்குப்போதிய நியாயமிருப்பதாகத் தெரிவித்துள்ள டக்றர் இம்பேட் அவர்கள் 321 திருக்காயவரத்தர்களின் நாமங்களைத் தமது இடாப்பிலேவெளியிட்டிருக்கின்றார், அதிலே 41 ஆடவர்கள் இருக்கின்றார்கள். ஆடவரும், பெண்மணிகளுமான இருபாலாருமாய் 62அர்ச்சியசிட்டர்களும், முத்திப்பேறுபெற்றவர்களும்இருக்கின்றார்கள். இவர்களிலே பிரஸ்தாபமாக அறியப்பெற்ற 26பேரினதும் நாமங்கள் வருமாறு:

1. அர்ச். பிரான்சிஸ் அசீஸியார், 2. அர்ச். லூட்கார்தே, 3. கோட்ரோனாவின் அர்ச். மார்கறேற் அம்மாள், 4. அர்ச். ஜேட்றூட் அம்மாள், 5. மொண்ரேபல்கோவின் அர்ச். கிளாரம்மாள், 6. பொலிக்ரோவின் முத். ஆஞ்ஜெலா, 7. அர்ச். சியன்னு கத்தறீன்அம்மாள், 8. அர்ச். லிடிவின், 9. ரூமைநகர் அர்ச். பிரான்சிஸ், 10. அர்ச். கொலெற், 11. காசியாவின் அர்ச். றீத்தம்மாள், 12. மந்துவாவின் முத். ஓசன்னு, 13. ஜெனேவாவின் அர்ச். கத்தறீன் அம்மாள், 14. முத். பப்திஸ்தா வரானி, 15. நார்னியின் முத். லூஸியம்மாள், 16. றக்கொனிக்கியின் முத். கத்தறீன் அம்மாள், 17. அர்ச். சிலுவை அருளப்பர், 18. றிக்குயின் அர்ச். கத்தறீன்அம்மாள், 19. பஸ்ஸியின் அர்ச். மரிய மதலேனம்மாள், 20. முத். மரிய கே பில்ன்கார்னேஷன், 21. யேசுவின் முத். மேரிஆன், 22. செஸ்ஸெயின் முத். கார்லோ, 23. அர்ச். மார்கறேற் மேரி அலக்கோக் அம்மாள், 24. முத். விசிற்றுன்டின் (இவருக்கு முள்முடிக் காயங்களே இருந்தன), 25. அர்ச். வரோணிக்கா கியூலியானி, 26. ஐந்துதிருக்காயங்களின் அர்ச். மரியம்மாள். இவர்களெல்லாம் 19-ம்நூற்றாண்டுக்கு முற்பட்டவர்களே.

19-ம் நூற்றாண்டைச்சேர்ந்தவர்களாய் 29 திருக்காயவரத்தர்கள் இருந்தார்கள். இவர்களில் அதிகம் கீர்த்திபெற்றவர்கள் கத்தறீன் எமறிக், எலிசபேத் கனேறி மோரு, முத். அன்னு மரியா ராய்ஜி, மரியா தே மோறில், லூயிஸ் லாத்தியோ என்பவர்களே.

## போர்வீரர்களின் திருயாத்திரை

பதினைந்துநாடுகளிலிருந்துயாத்திரைபோன நாற்பதினாயிரம் பேருக்கு மேற்பட்ட போர்வீரர்கள் சமீபத்தில் லூர்துதிருப்பதியை முற்றிகையிடலானார்கள். இவர்களெல்லாம் இரண்டுநாள் யாத்திரையாக அங்கு சென்றிருந்தார்கள். மாஷல்அல்போன்ஸ் ஜூஜின் அவர்களது தலைமையிலே முப்பதுஜெனறல்கள் இந்த யாத்திரையை வழிநடத்திச்சென்றார்கள். இந்த யாத்திரிகர்கள் 25 விசேஷ றெயின்வண்டிகளில் அங்குபோய்ச் சேர்ந்தார்கள். அல்ஜீரியாவிலிருந்து விசேஷவிடுமுறை பெற்றுச்சென்ற 10,000 பேர்உட்பட மிகப்பெருந்தொகையினராக 30,000 போர்வீரர்களைப் பிரான்ஸ் அனுப்பிவைத்தது. ஏனையநாடுகளில் மேற்கு ஜேர்மனி 2,000 பேரையும், ஐக்கியஅமெரிக்கதேசம் 1,800பேரையும், ஸ்பெயின் 1,000பேரையும், பெல்ஜியம், லக்ஷம்பேர்க், போர்த்துக்கால், குவாடரேமாலா, வெனெசியூலா முதலாம் நாடுகள் சிறுசிறு தொகையினரையும் அனுப்பிவைத்தன. இந்த 40,000 போர்வீரரும் பரீஸ்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் பெல்தின்ஆண்டவரதும், பிரான்சியபட்டாளங்களின் மேற்றிராணியாரதும் சமுகத்திலே சனிக்கிழமைநிறைவேறியபெரியபாடற்பூசையைக் காண்பதற்காகத் திருசேத்திரத்திலே பவனிசென்றார்கள். மறுநாள் ஞாயிற்றுக்கிழமை பரிசுத்தபிதா அவர்களுக்கு அனுப்பிவைத்த ஓர்செய்தியிலே பல்வேறுபட்ட சாதிகளின் இராணுவவீரர்கள்மத்தியில் காணப்படும் கிறீஸ்துவ சகோதரத்துவத்தைப் பாராட்டியிருந்தார்.

## முதலாவது பாகிஸ்தானிய அதிமேற்றிராணியார்

பாகிஸ்தானிலே நவமாக நிர்மாணிக்கப்பெற்ற கராச்சி அதிமேற்றிராசனத்தின் முதலாவது பாகிஸ்தானிய அதிமேற்றிராணியாராக மகாவண. யோசெவ் ஏ. கோர்டெய்ரோ சுவாமிகள் நியமனஞ்செய்யப் பெற்றிருக்கின்றார். அதனால், இவர் மேற்றிராணித்துவ, அன்றேல் அதிமேற்றிராணித்துவபதவிக்கு உயர்த்தப்பெற்ற ஐந்தாவது கராச்சியராவர். பம்பாய்நகர் அதிமேற்றிராணியாரான கருதினல் வலேரியன் கிருசியாஸ், அலகபாத்நகர லெயோனாட் றேய்மன்ட் மேற்றிராணியார், அமிதபாத்நகர எட்வின் பின்ரோ மேற்றிராணியார், பெல்காம்நகர மைக்கேல் றொட்றிக்குவெஸ் மேற்றிராணியார் என்பவர்களே ஏனையநால்வருமாவர். புதியஅதிமேற்றிராணியார் கராச்சிநகர் அர்ச். பத்திரிசியார் கல்லூரியிலே மற்றிக்குலேஷன் பரீட்சையில் கண்ணியத்துடன் அரங்கேறியதன்மேல் டி. ஜே. சிந்துக் கல்லூரியில் படித்து பி. ஏ. பட்டம்பெற்றார். பின்னர் கண்டியிலுள்ள பாப்பரசர் குருமடத்தில் சேர்ந்து வேதசாஸ்திரம்பயின்று1946-ம் ஆண்டுகுருப்பட்டம்பெற்றார். அதன்பின் 1948-ம் ஆண்டு இங்கிலாந்து சென்றுபடித்து, 1950-ம் ஆண்டு ஒக்ஸ்போட் சர்வகலாசாலையின் எம். ஏ. பட்டம்பெற்றுக்கொண்டு திரும்பிவந்து காராச்சி, குவெற்ரு முதலாம் இடங்களிலே கல்வித்தொண்டாற்றினர். கடைசியாகக் கராச்சியில் இருந்துவரும் அர்ச். பத்திநாதர் மேற்றிராசனக் குருமடத்தின் தலைவராக நியமனஞ் செய்யப்பெற்றார். இவர் கராச்சிநகரில்வசிக்கும் இளைப்பாறிய வைத்தியஅதிகாரியான டக்றர் பீற்றர் அதிரியான் - எல்லினு கோர்டெய்ரோ தம்பதிகளின் புதல்வர். இவரின் ஏகசகோதரரான வண. அந்தோனி ஜே. கோர்டெய்ரோ சுவாமியார் பம்பாய் அதிமேற்றிராசனத்திலே தொண்டாற்றிவருகின்றார்.

## அமெரிக்க கருதினலுக்குப்பதில் ஆர்மீனிய கருதினல்

விசுவாசப்பரப்புதல் திருச்சங்கத்தின் பதில்காரியதரிசியாக நியமனஞ்செய்யப்பெற்றமுதலாவது அமெரிக்கரான கருதினல்ஸ்றிற்ச் ஆண்டவர் எதிர்பாராதவிதமாக மரணத்திரையுள் மறைந்து சில தினங்களுள்தானே அப்பதவிக்கு ஆர்மீனியர்களின் பத்திறியாக்குவான கருதினல் கிறெகறி பீற்றர் அகாஜியானியன் ஆண்டவரைப் பாப்பரசர் நியமனஞ் செய்திருக்கின்றார். இதுவும் முன்னர் நிகழாத ஓர் நியமனமாகும். கருதினல் அகாஜியானியன் ஆண்டவர் காக்கேசஸ்நாட்டைச் சேர்ந்த அகால்ற்சிகி எனுமிடத்திலே 1895-ம் ஆண்டு பிறந்து, குருத்துவத்துக்கான தமது படிப்புமுழுவதையுமே ரோமாபுரியிலுள்ள விசுவாசப்பரப்புதற் சபைக் குருமடத்தில் முடித்துப்பிந்த அங்குதானே வேதசாஸ்திர பேராசிரியராய் இருந்துவந்தார். 1937-ம் ஆண்டு இவர் பத்திறியாக்குவாகிப் பின்னர் 1946-ம் ஆண்டு தற்போதைய பாப்பரசராலேயே ஓர் கருதினலாக்கப்பெற்றார். இவர் ஒருதொகையான பாஷைகளை வாக்குவன்மையுடன் பேசக்கூடியவர். விசுவாசப் பரப்புதல் திருச்சங்க தலைவரான 85 வயதுடைய கருதினல் புமாசோனி பியொந்தி ஆண்டவருக்கு இவர் உதவிசெய்து வருவார்.

## விசுவாசிகளின் கண்ணீரும், இரத்தமும்

சீனாவிலே வேதகலாபனைக்குள்ளாய்த் துன்புறுத்தப்படுகின்ற கத்தோலிக்கமக்களின் வீரத்துவத்தின்விளைவாக அங்கு பெருந்தொகையான சீனர்கள் இன்றுமே மனந்திரும்பிக்கொண்டு வருகின்றார்கள். ஆயினும், இவர்கள் தொகை அங்கே மிஷனரிமார் சுதந்திரமாக வேதம் போதித்து வந்தகாலத்திற்போன்று அதிகமானதன்றுதான் என்று நான்கிங் நகர போல் யுபின் அதிமேற்றிராணியார் சமீபத்தில் அபிப்பிராயம் தெரிவித்திருக்கின்றார். தற்போது இவர் சீனாவிலிருந்து நாடுகடத்தப்பெற்று ஐக்கிய அமெரிக்கதேசத்தில் சஞ்சரித்து வருகின்றார். "சீனாவிலே மிஷனரிமார் ஊக்கமாகத் தொண்டாற்றிவந்த காலத்திலே வருடம் ஒன்றுக்குச் சுமார் ஒருலட்சம் மனந்திரும்புதல்களைப் பெற்றுவந்தோம்; இப்போதோ நன்முன்மாதிரிகையின் பலத்தைக் கொண்டு ஒருகால் முன்னரைக் காட்டிலும் அதிகமான மனந்திரும்புதல்களை நாம் தொடர்ந்து பெற்றுவருகின்றோம்; மிஷனரிமார் வாய்திறவாது மௌனமாயிருக்கச் செய்துவிடப்பட் டிருக்கிறார்கள்; ஆனால், **விசுவாசிகளின் கண்ணீரும், இரத்தமும்** உத்தண்ட வாக்குவன்மை உடையனவாய் இருக்கின்றன; பழைய காலத்திலே சிற்சிலகாலங்களில் கத்தோலிக்கர் அந்நியர்களின் அடிமைகளென்று கருதப்பட்டு, இரண்டாந்தரப்பிரசைகளாக நடத்தப்பெற்றுவந்தார்கள்; இக்காலத்திலோ அவர்கள் உண்மையான கிறீஸ்துவ மனோதிடத்திற்கு எடுத்துக்காட்டுகளாய் உள்ளவர்கள்; சீனப்பாரம்பரியங்களையும், தேசிய வீரத்துவங்களையும் நிலைநிறுத்துகிறவர்களென வாழ்த்திக் கொண்டாடப்படுகின்றார்கள்" என்றும் யுபின் அதிமேற்றிராணியார் கூறியிருக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆடிமாதம்

**யேசுவின் திருஇரத்தத்தின் மாசம்**

**பொதுக்கருத்து :** தங்கள் அந்தஸ்துக்குரிய கற்புநிலைக்குப் பங்கமாக நிலவும்தப்பறைகளினுல் விசுவாசிகள் பாதிக்கப்படா திருப்பதற்காக வேண்டிக்கொள்வது.

**வேதபோதக கருத்து :** ஆபிரிக்காவின் பெரிய நகரங்களில் வாழும் ஏழைமக்களின் 'வாழ்க்கைப் பிரச்சினைகளும், குடியிருப்புப் பிரச்சினைகளும் கிறீஸ்துவதர்மத்தின்படி திரும்பும்படியாக மன்ருடிக்கொள்வது,

சத்திய வேத

# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
ஆடி மாதம் 10-ந் திகதி

## வேதசாட்சிகளின் நவயுகம்

நமது இரட்சாபிரானுகிய யேசுக்கிறீஸ்துநாதர் அன்று தமது இரட்சணிய திருமறையைஸ்தாபித்து, பூலோகமெங்கும்போய் அதனைப்போதிக்குமாறு தம்முடைய அப்போஸ்தலர்களை அனுப்பியபோது, நீங்கள்போகுமிடமெல்லாம் உங்களைஎல்லோரும் ஒரேமுகமாய் வரவேற்பார்கள் ; உங்கள் போதனைக்கு மாறில்லாது எல்லோருமே செவிசாய்ப்பார்கள் ; வாரந்தோறும், மாதந்தோறும் லட்ச, லட்சக் கணக்கானேர் மனந்திரும்பி ஞானஸ்நானம் பெறுவார்கள் ; ஆதலால், நீங்கள்எதற்கும் அஞ்சவேண்டியதில்லையெனச் சொல்லி அனுப்பினரா? இல்லை. — புறப்பட்டுப்போங்கள் ; ஓநாய்களின் நடுவில் ஆடுகளைப்போன்று இதோநான் உங்களை அனுப்புகிறேன்........எனது நாமத்தின் நிமித்தம் நீங்கள்யாவராலும் பகைக்கப்படுவீர்கள்........அதிபதிகள் முன்பாகவும், இராசாக்கள் முன்பாகவும் என்னைப்பற்றிக் கொண்டுபோகப்படுவீர்கள் ........நீதிச்சங்கங்களுக்கு உங்களைக் கையளிப்பார்கள் ; தங்கள் செபஆலயங்களிலும், உங்களைச் சாட்டைகளால் அடிப்பார்கள்.... இதோநான் உலகமுடியுமட்டும் எந்நாளும் உங்களோடுகூட இருக்கிறேன்........நரகத்தின் வாசல் திருச்சபையை மேற்கொள்ளமாட்டாதென்றே திருவுளம்பற்றினர்.

அப்போஸ்தலர்கள் வேதம் போதிக்கத் தொடங்கியதுமுதல் அங்கங்கெல்லாம் அதற்குண்டான எதிர்ப்புகளோ இம்மட்டென்று சொல்லுந்தரமன்று. பவுல்அப்போஸ்தலரே சவுலாயிருந்தபோது இதோகிறீஸ்துவேதத்தைப் பிறந்தஇடமேதெரியாது அதனை இறந்துபடச் செய்துவிடுவதாகக் கங்கணங்கட்டி நின்றார். திருச்சபையின் முதல் வேதசாட்சியெனக் கொண்டாடப்படுகிறவரும், கிறீஸ்துநாதரின் எழுபத்திரண்டு சீஷர்களில் ஒருவருமான அர்ச். முடியப்பர் கல்லாலெறிந்து கொல்லப்படுவதற்கு இவரும் உடந்தையாயிருந்தார். இவ்வாறு கிறீஸ்துவேதம் ஆரம்பமானகாலமுதல் அதனைக் குழிதோண்டிப் புதைத்துவிடுமாறு கங்கணங்கட்டிநின்ற சக்கிரவர்த்திகளும், அரசர்களும், அதிகாரிகளும், சனத்தலைவர்களும் மலையோடுமுட்டிய மண்ணுங்கட்டிகள்போல் மாண்டுமடிந்து மண்ணேடுமண்ணுய்ப் போனார்கள். ஆனல், அதுவோ வேதசாட்சிகளின் இரத்தத்தால் நீர்ப்பாய்ச்சப்பெற்று, செழிப்புற்று ஆலாவிருட்சம்போல் பரந்துசிறந்து இன்றைக்குமே இளமையுடன் நிலவுகின்றது.

கிறீஸ்துவேதம் ஆரம்பமாகி முதல் முந்நூறு வருடங்களிலும் ஜெருசலேமிலும், ரோமைநகரிலும் இன்னும் எத்தனையோநாடுகள், நகர்கள், கிராமங்களிலும் தங்கள் திருவேதத்திற்காகத் துன்புறுத்தப்பட்டு, இம்சிக்கப்பட்டு, குருதியைச்சிந்திப் பிராணனைத் தியாகஞ்செய்தவர்கள் அம்மம்ம ! எத்தனைபேரென்று எண்ணிக் கணக்கெடுக்கலாமா ? ஆனல், “கிறீஸ்துவ யுகத்தின் முதல்முந்நூறு ஆண்டுகளைக் காட்டிலும் 1917-ம் ஆண்டிற்கும், நிகழும்ஆண்டிற்குமிடையிலே திருச்சபையில் அதிகமான வேதசாட்சிகளைக் கொண்டிருந்திருக்கிறோம்”என்று அமெரிக்க பெரிய கல்விமானுகிய புல்ரன் ஷீன் ஆண்டகைஅவர்கள் கூறுமிடத்து நாம் ஆச்சரியப்படவேண்டியதில்லை. கம்யூனிஸம் என்ற நாஸ்திகஇயக்கம் என்று ஆரம்பமானதோ அன்றுமுதல் இன்றுவரை கம்யூனிஸ்தர்கள் கொன்றுகுவித்த — துன்புறுத்திய கத்தோலிக்கமேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னியாஸ்திரீமார், சாதாரண கத்தோலிக்கரின் தொகையோ இம்மட்டென்று. சொல்லுந்தரமன்று. கத்தோலிக்கதிருச்சபை கம்யூனிஸத்தின் சென்மசத்துரு என்பதை, அதனைப்பூண்டோடு அழித்துவிடின் உலகில்மதவிஷயமாய்த் தனக்குஎதிர்ப்பேகிடையாதுஎன்பதைக் கம்யூனிஸத்துக்குத்தலையான சோவியற் ருஷியா கண்டுணர்ந்து கடந்த நாற்பதுஆண்டுகளாகச் சண்டவேகத்துடனே அதனைஎதிர்த்துப் பயங்கரவேதகலாபனைநடத்திக்கொண்டு வருகிறது. கடுங்குளிரான சைபீரிய அடிமைத்தொழில்முகாங்களிலே, சிறைச்சாலைகளிலே இன்றைக்கும் கடினஉழைப்பாலும், பசிபட்டினியாலும் வாடிவதங்கி எலும்புக்கூடுகளாய்க் காட்சியளிக்கின்ற மேற்றிராணிமார், குருமார், சந்நியாசர், கன்னியர், மற்றும்கத்தோலிக்கரைப்பற்றிய பரிதாபசெய்திகள் காலந்தோறும் வெளிவந்துகொண்டேயிருக்கின்றன. ஆனல், அவர்களின் கண்ணுருவியான காட்சியைக் கண்டும் சோவியற் நாஸ்திகதலைவர்களின் கன்னெஞ்சம் இரங்குவதாயில்லை. இளகுவதாயில்லை. ஆனல், அது இதுவரை கண்டபலன்என்ன ? திருச்சபையை அழித்துவிட்டதா ? திருச்சபை அழிந்துவிட்டதா ? இல்லை. வேதசாட்சிகளின் மற்ருேர் நவயுகத்தை அது உண்டுபண்ணிவிட்டதல்லாது கண்டபலன்ஒன்றுமில்லை. எவ்வாறு ? அடுத்த இதழில் எடுத்[illegible]வோம்.

## தலைமை ஆசிரியர்களுக்கு அறிவித்தல்

### அவசரகால நிலைமையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகள்

தங்கள் பாடசாலை வருடத்தினை 1958-ம் ஆண்டு மே 31, ஜூன் 30, ஜூலை 31-ம் திகதிகளில் பூர்த்திசெய்யும்பாடசாலைகளில் அநேகமானவை பிரமாணங்களால் விதிக்கப்பட்டபடி தமக்குத் தேவையான 180 அல்லது 360 பாடசாலை நேரங்களை நடாத்தமுடியாதிருக்கலாம். கூடுமானவரையும் பாடசாலைநேரங்களை நடத்தும்படி அவைகள் அறிவுறுத்தப்படுகின்றன. அதன்மேலும் குறைவு காணப்படின், அதனைஈடுசெய்வதற்குத் தேவையான நாட்களைப் புதுப்பாடசாலை ஆண்டில் நடாத்த வித்தியாதிபதியால் அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது. உதாரணமாக, 30-6-58-இல் நன்கொடை வருடம் முடியும் ஒருபாடசாலை ஆக 175 நாட்களிலேயே பாடசாலை நடாத்தியிருப்பின், 1-7-58-இல் இருந்து பாடசாலைநடக்கும் 5 நாட்களை அதனுடன் சேர்க்கலாம். அங்ஙனம் சேர்க்கப்படும் நாட்கள் புதுவருடத்துக்கான பாடசாலைநாட்களின் எண்ணிக்கையில் இருந்து நீக்கப்படவேண்டும். புதுப்பாடசாலை வருடத்துக்குத்தேவையான பாடசாலைநாட்களை நடத்துவதற்கென விடுமுறைகாலம் குறைக்கப்படவேண்டும்எனின் தலைமைஆசிரியர் நமக்கு அறிவிக்கவேண்டும்.

Philip Ponniah,
*Gen. Manager, R. C. Schools*

Jaffna, 7-7-58

## தலைவில், அர்ச். அன்னம்மாளின் திருநாள்

வருடந்தோறும் கொண்டாடப்படும் தலைவில், அர்ச். அன்னம்மாளின் திருநாள் வழமைபோல இவ்வருடமும் கொண்டாடப்படும். முதலாவது திருநாள் ஆடிமாதம் 20-ந் திகதியும், பெரியதிருநாள் ஆடி மாதம் 27-ந் திகதியும் கொண்டாடப்படும்,

அதிவண. ஏ. மாட்டின் பெர்னண்டோ,
கட்டளைக்குரவர்.

தலைவில், அர்ச். அன்னம்மாள் யாத்திரைஸ்தலம்,
ஆடி மீ 3-ந் திகதி.

### ஆஸ்பத்திரிசுவீப் ஆதாயம்

ஆஸ்பத்திரிச் சுவீப்மூலம் அரசாங்கத்துக்குஇதுவரை 60லட்சம் ரூபா ஆதாயம்கிடைத்திருக்கிறது. இப்பணத்தை எதற்குச்செலவிடுவது என்பதுபற்றி அரசாங்கம் இன்னும்தீர்மானிக்கவில்லை. ஆயுர்வேதஆஸ்பத்திரிகளை அபிவிருத்திசெய்வதற்கு இந்தப் பணத்தைச் செலவிடலாமென ஆலோசனைகூறப்பட்டிருக்கிறது.

### கொலைகள் குறையவில்லை

ஊரடங்குச்சட்டம் நடைமுறையில் இருந்தபோதிலும் சென்றஆனிமாதத்திலே இலங்கையில் கொலைகளின்தொகை குறையவில்லை. சென்ற ஆனியிலே நாளொன்றுக்கு இரு கொலைகள்வீதம் 69கொலைகள் நிகழ்ந்திருக்கின்றன. இவ்வருடத்திலே ஆனிமாதம் ஈருகவுள்ள முதல்ஆறு மாதங்களிலும் நிகழ்ந்துள்ள கொலைகளின்தொகை 371. சென்றஆனியிலே நிகழ்ந்த விபத்துமரணங்கள் 28. இவ்வருடத்தின் முதல்ஆறுமாதங்களிலும் 152.

### மானிப்பாய்க் கிறீன் ஆஸ்பத்திரி

மானிப்பாயிலுள்ள கிறீன்ஆஸ்பத்திரியிலே அடுத்துநிகழும் ஆவணிமாதம் 1-ந்திகதிமுதல் வைத்தியதொண்டாற்றுமாறு டக்றர் எஸ். சற்குணராஜா, டக்றர் நேசராஜா மோசேஸ் எனும்இருவரும் புதிதாகநியமனஞ்செய்யப் பெற்றிருக்கிறார்களென அறிகின்றோம்.

### வவுனிக்குள குடியேற்றம்

வவுனிக்குள குடியேற்றதிட்டத்தின் கீழ் குடியேற்றுவதற்கென்று யாழ்ப்பாணப்பகுதியிலே வேலையற்றிருக்கும் படித்தமாணவர்கள் மத்தியிலிருந்து 55பேர் தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். இந்தக்குடியேற்ற திட்டத்திலே யாழ்ப்பாணக் கமக்காரருக்கென 500 காணித்துண்டுகள் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. இவர்களில் பத்துவிகிதமானேர் படித்தமாணவர்கள் மத்தியிலிருந்து தெரிவுசெய்யப் பட்டிருக்கிறார்கள். ஏனையவர்கள் ஏற்கனவே அந்தந்தப் பகுதிகளில் நடந்தேறிய காணிக் கச்சேரிகள்மூலம் தெரியப்பட்டுவிட்டார்கள். இன்னும்சிலவாரங்களில் இவர்களெல்லாம் அங்கு குடியேற்றப் படுவார்களெனத் தெரியவருகிறது.

### கல்விமந்திரி கழறுகின்றர்

வெலிகாமத்தைச்சேர்ந்த ஹல்லல அரசினர்கலவன்பாடசாலைப் புதியகட்டடத் திறப்புவிழா சென்ற 3-ந்திகதி நடைபெறலாயிற்று. அதிலே கல்விமந்திரி டபிள்யு. தஹநாயகா பேசியபோது: “செவ்வனேநிர்வகித்து நடத்தப்பட்டுவருகின்ற உதவிப்பணம் பெறும் பாடசாலைகள்மீது நான் கைவைக்கவேண்டிய அவசியமில்லை; உதவிப்பணம்பெறும் பாடசாலைகளை நான்எடுக்கவேண்டுமெனக் கோரிவருகின்ற சிலகறள்பிடித்த மூளைகளுக்கு இதுதான் நான்கொடுக்கும்பதில்” எனக் கூறலாயினர்.

### கல்லூரிஅதிபருக்குப் பயனுபசாரம்

மன்னர், அர்ச். சவேரியார் கல்லூரி அதிபர் சங். பிறதர் சீஸர், பி. எஸ்சி., பி. ஏ. அவர்கள் ஐரோப்பாவுக்குச் செல்வதைமுன்னிட்டு அக்கல்லூரிப் பழையமாணவர்கள் அதிவண. ஜி. ரி. பாலசுந்தரம் சுவாமியவர்கள் தலைமையிலே சென்ற 2-ந்திகதியன்று அவருக்கு ஓர் பரிமளிப்பான பிரியாவிடைக் கொண்டாட்டம் நடத்தினர்கள். மன்னர்ப்பட்டினசபைத்தலைவர் சங். பிறதர் அவர்களின் உருவப்படம்ஒன்றைத் திரைநீக்கஞ்செய்துவைத்துப் பேசியபோது: அர்ச். சவேரியார் கல்லூரிக்கும், மன்னர்ப்பிரிவுக்கும் அவர்செய்துள்ள அருஞ்சேவைகளைப் பாராட்டி நின்றர். பிறதர்அவர்கள் சிந்தாத்திரையாக ஐரோப்பாசென்று சேமமே திரும்பிவரவேண்டுமெனத் தலைமை தாங்கிய சுவாமியவர்கள்கூறிய ஆசியோடும், பிறதர்அவர்கள்கூறிய நன்றியுரையோடும் பிரியாவிடைவிழா நிறைவாயிற்று.

### புதியசீனித் தொழிற்சாலை

பருத்தித்துறையைச்சேர்ந்த வாரத்துப்பளையிலே பதநீரிலிருந்து சீனிதயாரிக்கும் தொழிற்சாலைஒன்று புதிதாக அமைக்கப்பட்டு இம்மாதமுதல் தொழிற்படத் தொடங்கியிருக்கிறது. தும்பளைக் கிராமமுன்னேற்றசங்கத்தின் ஆதரவில் முற்றுகச் சீவற்தொழிலாளர்களையே அங்கத்தவர்களாகக் கொண்டு தொழிற்படத் தொடங்கியுள்ள இந்தத்தொழிற்சாலைக் கட்டடத்துக்கு அரசாங்கம் சுமார் 3,000ரூபா நன்கொடை அளித்திருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**யேசுவின் திருஇருதயத் திருநாள் :** இருதயங்களுக் கெல்லாம் அரசராகிய யேசுவின்திருஇருதயத் திருநாள் இந்துவழமையான திரிதின ஆராதனைகளுடன் பக்தியருட்சியாகக் கொண்டாடப்படலாயிற்று. திருநாளுக்குமுதல்நாள் செபமாலை, பிரார்த்தனையின்பின் வண. சி. பூர்டோசுவாமியவர்களும், வண. கட்டளைக்குரவரும் துணைபுரிய வண. ஜே. ரி. லினகன் சுவாமிகளால் வேஸ்பர்பாடப்பட்டது. பின்னர் திருஇருதயநாதரின் திருச்சுரூபம் அழகுறச் சிங்காரிக்கப்பெற்று ஆலயவீதிவழியே சுற்றுப்பிரகாரமாகச் செபங்கள், பாடல்களுடன் எடுத்துச்செல்லப்பட்டது. அதன்மேல் தேவநற்கருணை ஆசீர்வாதத்தின்போது திருஇருதயத்துக்கு நிந்தைப்பரிகாரஞ் செய்து, நாட்டில்ஏற்பட்ட கலவரங்கள் அனைத்தும்ஒழிந்து சகலர்இருதயங்களிலும் சமாதானம்நிலவும்படியாக விசேஷசெபங்கள் சொல்லப்பட்டன. திருநாளன்று காலை நமதுபங்குக்குரவர் பாடற்பூசை நிறைவேற்றினர். பகல்முழுவதும் திவ்வியநற்கருணை எழுந்தேற்றம்செய்து ஆராதனைக்காக வைக்கப்பட்டிருந்தது. அன்று அகிலஇலங்கைக் கத்தோலிக்கபாடசாலைகள் தினமாகையால் குரவர்தமது பங்கிலுள்ள ஆண்பெண் பாடசாலைகளைச் சேர்ந்தவர்களால் ஓர் விசேஷ திருமணி ஆராதனையைத் தாமேதலைமைதாங்கி நடாத்திவைத்தார். பகல்முழுவதும் பங்குக்கிறீஸ்துவர்கள், பத்திச்சபைகளைச் சேர்ந்தவர்கள், பாடசாலைப்பிள்ளைகள், ஆசிரியகலாசாலை மாணவர் மாணவிகள், வயோதிபர் மடத்துக் கன்னியர்கள் ஆதியோர் முறைமுறையாக நற்கருணைநாதரைச் சந்தித்து வணங்கிவழிபட்டுச்சென்றார்கள். ஈற்றில் நிந்தைப்பரிகாரமும், திருஇருதயத்துக்குப் பங்கினைஒப்புக்கொடுக்கும்செபமும் செய்யப்பட்டுத் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்படலாயிற்று.

**கோடியற்புதரின் திருநாள் :** கோடியற்புதராகிய அர்ச். அந்தோனியார்திருநாள் நமதுபங்கிலுள்ள அந்தோனியாரின் நாமம்பூண்ட பெரியோர், சிறியோரால் சென்ற 14-6-58 சனிவாரம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது முதல்நாளன்றுமாலை செபமாலை, பிரார்த்தனையின்பின் அர்ச். அந்தோனியாரின் திருச்சுரூபம் அழகுறச்சிங்காரிக்கப்பட்டு ஆலயவீதிவழியே சுற்றுப்பிரகாரமாக எடுத்துச்செல்லப்பட்டது. அதன்மேல் வேஸ்பர்பாடப்பெற்றுத் தேவநற்கருணை ஆசீர்வாதமும், அர்ச். அந்தோனியார் திருச்சுரூப ஆசீர்வாதமும் அருளப்படலாயின. சமுகமாயிருந்தோர்க்கு அர்ச். அந்தோனியார் அப்பம் பகிர்ந்துகொடுக்கப்பட்டது.

**ஆலய திருப்பணி :** கலகம், ஊரடங்கும்சட்டம் ஆதியவற்றால்-பாதிக்கப்பட்டிருந்த நமதுஆலயதிருப்பணி மீண்டும் சென்ற ஆனி 16-ந்திகதியன்று ஆரம்பமாகித் தீவிரமாக நடைபெற்றுவருகின்றது. அதனால் தேவாராதனைகள்அனைத்தும் நமதுபங்கைச் சேர்ந்த "பாத்திமா கிரி"யிலேயே நடைபெறுகின்றன. கச்சான்காற்று, அகோரவெய்யில் ஆதியவற்றையும்பாராய்பண்ணாது நமதுகுரவர் வேலையைக்கண்காணித்து வருவதோடு, தாமும் அதில்பங்கெடுத்துப் பணியாற்றுவது பாராட்டத்தக்கது.

**பூசைப்பரிசாரகர்சபைப் பாதுகாவலர் :** பூசைப் பரிசாரர்களின் பாதுகாவலரான அர்ச். ஞானப்பிரகாசியார்திருநாளை நமதுபங்கிலுள்ள பூசைப்பரிசாரகர்சபையார் சென்ற 21-6-58 சனிவாரம் சிறப்பாகக் கொண்டாடினர். முதல்நாள் எல்லோரும் ஒன்றுகூடிக் கொடிகள், மாலைகள், மலர்களால் பலிபீடத்தையும், அர்ச். ஞானப்பிரகாசியார்படத்தையும் அழகுபெறச் சிங்காரித்துத் தீபங்கள் ஏற்றினர். பிற்பகல் 5மணிக்குச் செபமாலை, பிரார்த்தனைமுடிந்ததும் வேஸ்பர்பாடித் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. பின்னர் பூசைப்பரிசாரகர் கட்டளைக்குரவர் சமேதராய் ஓர்சிறிய தோட்டவிருந்து நடத்திமகிழ்ந்தனர். திருநாளன்று காலை பாடற்பூசை நிறைவேறியது. பூசைப்பரிசாரகர் அனைவரும் சமுகமளித்துத் திருவிருந்தருந்தித் திருநாளை இனிதேமுடித்தனர். இவர்கள் அந்தந்நாளுக்குரிய சிவப்பு, பச்சை, கறுப்பு, நீலம், ஊதாமுதலியவர்ணங்கள்கொண்ட பரிசாரகர் உடைகள் அணிந்து பலிபீடத்தில் பணியாற்றுவது பார்ப்போருள்ளங்களைப்பரிமளிக்கச்செய்வதாகும்.

**உல்லாசப் பிரயாணம் :** அன்று சனிவாரம், 21-6-58. நம்பங்கிலுள்ள மாசில்லாமாதா சபையாருக்கு ஓர் உல்லாசநாள். தங்கள் திட்டப்படி அவர்கள் அன்றுகாலை ஒன்றுகூடித் திவ்வியபூசைகண்டபின் 8-30 மணியளவில் எல்லோரும் கட்டளைக்குரவர் தலைமையில் மாதாவின் ஆசியையிரந்துகொண்டு மோட்டர்வாகனங்களிலே தங்கள்உல்லாசப்பிரயாணத்தை ஆரம்பித்தனர். அழகிய கட்டடங்களையும், செந்நெற்கழனிகளையும், வன்னச்சோலைகளையும் வனப்புமிக்க வாவிக்கரைவழியே கண்டுமகிழ்ந்து சென்றனர். மா, பலா, வாழைமுதலாம் முக்கனி மரங்களும், முந்திரிகை, ஈஞ்சுமுதலாம்ஏனையமரங்களும் நிரம்பப்பெற்றதும் தென்னஞ்சோலையும், இளந்தென்றல்வீசும் இன்பந்தரும் பூங்காவுமுள்ளதுமான வேப்படித்துறைஎன்னும் கிராமத்தைஅடைந்தனர். ஆங்கு இப்பகுதிக்கிறீஸ்துவர்களுக்கெனப் பிரமாண்டமாகக் கட்டியெழுப்பப்பெற்றதும், வேலைமுழுவதும்பூர்த்தியடைந்துகொண்டிருப்பதுமான தியானசாலையைச் சுற்றிப்பார்த்து மகிழ்ந்தனர். பாடும்மீன்நிறைந்த ஓடும்நீரோடையான மட்டக்களப்புவாவியினுள் இறங்கிச் சிறிதுதூரம்நடந்து இன்பம்கொண்டனர். பின்னர் தியானசாலையின் அருகேயுள்ள மாமரநிழலில்தங்கினர். சிற்றுண்டிவகைகள், குளிர் பானங்கள் அருந்தித் தத்தம் விருப்பிற்கிசைய விளையாடுவதில் ஈடுபட்டனர். மதியநேரமானதும் கட்டளைக்குரவருடன் பந்தியமர்ந்தனர். பின்னர் குரவர் விருப்பிற்கேற்கப் பாடல், ஆடல்முதலியவற்றுடன் ஓர்காலட்சேபம்நடத்தினர். மாலைப்பொழுதானதும் குரவருக்கும், சபைத்தலைவிக்கும் நன்றியுரைகூறிக் குரவர்ஆசியோடு "மாதாவே சரணம்" என்ற பாட்டைப்பாடிக்கொண்டு மோட்டர்வாகனங்களிலே தத்தம் இல்லங்களுக்குத் திரும்பினார்கள்.

— நிருபர்

---

## கூட்டுறவு அபிவிர்த்திக் கம்மிஷனர்

கூட்டுறவு அபிவிர்த்தி உதவிக்கம்மிஷனரான திரு. ஆர். சி. எஸ். குக்அவர்கள் தம்முடைய தலைமைஸ்தானத்தை வவுனியாவிற்கொண்டு வடக்கு—கிழக்கு மாகாணங்களுக்குப் பொறுப்பாளியாகக் கூட்டுறவுஅபிவிர்த்திப் பிரதமஉதவிக்கம்மிஷனராக நியமனஞ் செய்யப் பெற்றிருக்கின்றார்.

## வெள்ள அகதிகளுக்காகச் சுவீப்

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் புதுவாழ்வு அளிக்குமுகமாகச் சுவீப்எனப்படும் அதிர்ஷ்டலாபச் சீட்டுத் திட்டம்ஒன்றை அரசாங்கம் நடைமுறைக்குக் கொண்டுவரவிருக்கிறது. சென்றமார்கழிமாதம் ஏற்பட்ட வெள்ளச்சேதங்களைச் சரிப்படுத்துவதற்கும், அகதிகளுக்குப் புதுவாழ்வு அளிக்கவும் இந்தச்சுவீப் பெரிதும் உதவுமென்று அரசாங்க உள்நாட்டுப் பகுதி ஆலோசனை கூறியுள்ளது. கொழும்புத்திட்டசுவீப் இதன் ஆதாவில்தான் நடைபெற்றுவந்தது. அத்திட்டப்பொருட்காட்சி தற்போது நீக்கப்பட்டுவிட்டதால் அதிலிருந்து கிடைத்தஇலாபமும் அகதிகளின் புதுவாழ்வுக்கென்றே செலவிடப்படுமாம்.

---

## ஸ்ரீமதி ஹெலன் ஹோமர் வன்னியசிங்கம் அவர்களின் தேகவியோகம்

முன்னைநாள் யாழ்ப்பாண முடிக்குரிய அப்புக்காத்து ஸ்ரீமான் ஜே. ஹோமர் வன்னியசிங்கம் அவர்களின் பாரியாரும், முன்னைநாள் சுப்பிறீங்கோட்டு நீதியரசர் ஸ்ரீமான் எச். ஏ. பி. சந்திரசேகரா, கே. சி. அவர்களின்சகோதரியுமான ஸ்ரீமதி ஹெலன் வன்னியசிங்கம்என்பவ தம்முடைய தள்ளாப்பிராயமான 87-ம்வயதில் இறைவனடிசேரலாயினா. இவவுடைய மூத்தபுதல்வர் சீச்சில்தீவின் பிரதமநீதியரசராயிருந்துகாலஞ்சென்ற ஸ்ரீ ஜேம்ஸ் வன்னியசிங்கம் அவர்கள். முன்னர் காலிப்பகுதி நீதவானாயிருந்த ஸ்ரீமான் ஏ. எஸ். வணிகசூரியர்அவர்களின் பாரியாரான ஸ்ரீமதி றூபி வணிகசூரியரும், திருவிதாங்கூரிலே அரசாங்க விருந்தாடிகள்பகுதியின் தலைவரான ஸ்ரீ ஜி. டி. ஜே. அரசரத்தினம்அவர்களின் பாரியாரான ஸ்ரீமதி பேள் அரசரத்தினமும், கிராமக்கோட்டு அக்கிராசனராகிய ஸ்ரீ அல்பிறெட் வன்னியசிங்கம் அவர்களும், இலங்கைமத்தியவங்கி அக்கவுண்டர்களில் ஒருவரான ஸ்ரீ யோசெவ் வன்னியசிங்கம் அவர்களும் இவவுடைய புத்திரிகள், புத்திரராவர்.

இவ தம்முடைய இளம்பிராயமுதல் தங்கள் குடும்பகோவிலாகிய கிளாலி, சந்தியோகுமையோர் ஆலயத்தின் திருநாட்களை ஆடம்பரமாகக் கொண்டாடுவதைப் பொறுப்பேற்று நடத்திவந்ததே இவவுடைய சீவியகாலத்தில் ஓர்முக்கிய அம்சமாகும். மேலும் இவ தன்னுடைய விசுவாசசீவியத்தினாலும், பிறர்சிநேக வாழ்க்கையினாலும் மற்றோர்க்கு ஓர்மேல்வரிச்சட்டமாகச் சீவித்துத் தமக்குக் கொடுக்கப்பட்ட விசுவாசத்தின்ஒளியை மற்றோர்க்கும் அளிக்கும்ஓர்புனிதசீலியாய்ச் சீவித்துவந்தா. இவவை இழந்துதுன்புறும் புத்திரர், புத்திரிகள், பேரப்பிள்ளைகள், மற்றும்இனசனருடன் நாமும் அனுதாபப்படுகின்றோம்,

**R. I. P.**

---

● கனடாதேச ஒன்ரேறியோ மாகாணத்திலே மனிதனால்வெட்டப்பெற்ற உலகின்மகாப்பெரிய செயற்கைவாவி சென்ற 4-ந் திகதியன்று தண்ணீரால் நிரப்பப்படலாயிற்று. இந்தவாவி 35 மைல் நீளமுடையது. இதனை "எலிசபெத் வாவி" என்று அழைக்கக் கனடாதேசமக்கள் ஆசிக்கின்றார்கள். அமெரிக்கரோ "சென் லோறன்ஸ் வாவி"என்று அழைக்கின்றார்கள்.

● றோமைநகர் சமீபத்திலே தனது ஆதிகால கிறீஸ்துவ வேதசாட்சிகளை ஞாபகப்படுத்திக் கௌரவிக்கலாயிற்று. புராதன அப்பியன்பாதைவழியாக ஊர்வலமொன்று நடைபெற்று அர்ச். கலிக்ஸ்துஸின் சுரங்கஅறைகளில் பிரவேசிக்கலாயிற்று. அங்கே மூன்றும் நூற்றாண்டைச்சேர்ந்த கிறீஸ்துவர்கள் இரண்டாவது வேதகலாபனையின்போது ஒளித்தோடிச் சென்றபாதை இதுவேயாகும்.

---

காலஞ்சென்ற

திரு. சவரிமுத்து நீக்கிலாஸ்பிள்ளை

அவர்களின்

## அமரதின நினைவு

**முதலாண்டுநிறைவு**

| பிறப்பு: | இறப்பு: |
|---|---|
| 1—3—1903 | 16—7—57 |

**மக்கள் புலம்பல்**

மதிவதனப் புன்னகையும்
குழந்தைப் பேச்சும்
மறைந்தனவோ ஓராண்டு
ஐயோ! இல்லை
மணியொன்றென் றெம்மனத்திற்
காணுகின்றோம்
மறப்போமோ நெஞ்சமதில்
அமைதி யாமோ
மனமொடிந்து வாடுகின்றோம்
தமக்காய் என்றும்
மகிபனுய்க் குருசேறிச்
செகத்தை மீட்ட மா
மன்னர் திருப்பாதம்
வேண்டுகின்றோம்

ஆண்டவரே! உமது திருக்கருணையை முன்னிட்டு உமதுஅடியானாகிய நீக்கிலாஸ்பிள்ளையின் ஆத்துமத்தின் பேரிற் கிருபையாயிரும்.

நித்திய இளைப்பாறுதலை அவருக்குக் கட்டளையிடுவீராக எனவேண்டிக் கொள்ளுகிறோம். சுவாமி! முடிவில்லாதபிரகாசம் அவருக்குப் பிரகாசிக்கக்கடவது, ஆமென்.

வருகிற 16-7-58-ப் புதன்கிழமை அதிகாலை 5-30மணிக்கு அன்னவரின் ஆத்துமசாந்திக்காக இளவாலை, அர்ச். அன்னம்மாள் தேவாலயத்தில் ஓர் துக்கப்பாடற்பூசை நிறைவேறும். இப்பிரசுரத்தைக்கண்ணுறும் பெரியோர், சிறியோர்யாவரும் இவருக்காக மன்றாடும்படி பரிவாய்வேண்டுகின்றோம்.

பிரிந்து துயருறும்
**மனைவியும், மக்களும்.**
மாரிசங்கூடல்

---

## தமிழ்மொழி உபயோகசட்டம்

நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகம்பற்றி அரசாங்கம் கொண்டுவரவிருக்கும் சட்டம்சம்பந்தமாகப் பிரதமர்பண்டாரநாயகா சென்றதிங்கட்கிழமை புத்தபிக்குகளுடன் பேச்சுவார்த்தை ஆரம்பித்துள்ளார். நியாயமான அளவு தமிழ்மொழி உபயோகம் பற்றி அரசாங்கம் அதிவிரைவிலே ஒரு சட்டம்கொண்டுவருமெனக் கவர்னர்—ஜெனறல் தமதுசிம்மாசனப் பிரசங்கத்தில் குறிப்பிட்டிருந்தார். இந்தச்சட்டம் சம்பந்தமாகப் பிரதமர்அன்றுதினம் புத்தபிக்குகளுடனும், மற்றும் சிலருடனும் பேச்சுவார்த்தை நடத்தினார். அவர்நடத்திய கூட்டத்திலே அஸ்கிரிய, மல்வத்தைப்பிரிவுகளின் மகாநாயக தேரோக்கள்உட்படச் சுமார் 25நாயகதேரோக்கள் கலந்துகொண்டார்கள். உத்தேசசட்டம்பற்றிப் பிக்குகளுக்குப் பிரதமர்விரிவாக விளக்கினாரென்றும், பின்னர்அதுபற்றி விவாதிக்கப்பட்டதென்றும், பிக்குகள் ஐக்கியமுன்னணிப் பிரதிநிதிகளும் கூட்டத்தில் கலந்துகொண்டார்களென்றும் தெரியவருகிறது. இந்த உத்தேசசட்டம் அதிகம்விரைவிலே அரசாங்க பாராளுமன்றக் கட்சியினரிடம் சமர்ப்பிக்கப்படவிருக்கிறது.

---

● பசிபிக்மகாசமுத்திரத்திலுள்ள அமெரிக்க அணுக்குண்டுப் பரிசோதனைத் தலத்திலே சென்ற 5-ந் திகதியன்று பிற்பகல் 2-30 மணிக்கு மற்றுமோர்வெடிகுண்டு வெடிக்கவைத்துப் பரிசோதனைசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. நான்குதினங்களுக்கிடையில் அங்கு ஐந்துவெடிகுண்டுகள் வெடிக்கவைத்துப் பரிசோதனை செய்யப்பட்டிருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேர்ஸ் பிலோமினா

[ முன் தொடர்ச்சி ]

பீற்றர்—ஆமாம், நேர்ஸ்பிலோமினாவுக்கு எங்கள் நன்றிக்கடனைத் தீர்க்கத்தானவேண்டும். அம்மா! நீங்கள் சொன்னதுபோல ஒருநாளைக்கு அவவை எங்கள்மனைக்கு அழைத்துச் சென்று விருந்திட்டு உபசரித்துத் தகுந்தஓர்சன்மானமும் செய்தனுப்பத் தான்வேண்டும். அம்மாவின் கேள்விக்கிசைந்து தாங்கள் வரத்தான்வேண்டும்;

பிலோ—(சிறுபுன்முறுவலுடன்) அதற்கென்ன. இப்படியெல்லாம் தாங்கள் நல்லெண்ணத்துடன் கேட்கும்போது நான்அல்லத்தட்டுவது சரியல்லத்தான். ஏதோ தங்கள் விருப்பம்போல் ஆகட்டும்.

சீமா—பீற்றர்! நீ கோவிலுக்குப் போகவிரும்பினால் இதோபோய்வா. நேரமாகிவிட்டது. நாங்கள் சமுகமளிக்கவேண்டிய கொண்டாட்டம் ஆரம்பமாக இன்னும் ஒரு கால்மணி நேரமேஇருக்கின்றது.

பீற்—(உடனே) நேர்ஸ்பிலோமினாவிற்குக் கைகொடுத்து, நானும் அம்மாவும் விரைவிலே தங்களைத் திரும்பவும் சந்திப்போமென நினைக்கிறேன். தங்கள் செபமாலையை நானே வைத்திருக்கும்படி விட்டுவிட்டதற்காக ஆயிரம் ஆயிரம்முறை தங்களுக்கு நன்றிகூறுகின்றேன்.

அதன்மேல் பீற்றர் கோவிலைநோக்கி விரைந்துசென்றான். நேர்ஸ்பிலோமினாவும் தனது விலாசத்தை எழுதிக் கொடுத்துவிட்டுச் சீமாட்டியிடம் விடைபெற்றுக்கொண்டு தீவிரமாக நடந்துசென்றாள். செல்லும்போது அவள்சிந்தனைக்கடலிலே பலவித எண்ணங்களும் அலைகளைப்போல ஒன்றின்பின் ஒன்றாய் எழுந்துகொண்டிருந்தன. தனதுவெள்ளிக்குருசுச் செபமாலையைக் கண்டறிந்ததும், தான்செபமாலை கொடுத்த வாலிபரையும், அவர்தாயாரையும் எதிர்பாராதவிதமாகச் சந்தித்ததும், அன்னார்காட்டிய பெருங்குணமும், அந்தவாலிபர் தன்னால் மனந்திரும்பி நல்வழிப்பட்டாரெனச் சொல்லக்கேட்டதும் ஆதியனவெல்லாம் அவள்மனக்கண்முன்பாக ஓர்படக்காட்சிபோன்று பிரதிபலித்துக்கொண்டிருக்கத் தனதுஉத்தியோகதானத்தைப் போயடைந்தாள் நேர்ஸ் பிலோமினா.

இதுநிகழ்ந்து சிலவாரங்கள் சென்றன. ஓர்நாள்ஞாயிற்றுக்கிழமைகாலை பத்துமணி இருக்கும். நகரின்தென் பகுதியிலே நாலாம்குறுக்குத்தெருவில் 36-ம்இலக்கத்தைக்கொண்ட சிறு மனைஒன்றிலே ஓர்இளநங்கை அங்குமிங்குமாக அமைதியாக உலாவிக் கொண்டும், அடிக்கடிவெளிக் கதவண்டைவந்து வீதியைநோக்கிக்கொண்டுமிருந்தாள். அவ்வாறிருக்கும்போது அம்மனையின்முன்பாக ஓர்மோட்டார் ரதம்வந்து மெதுவாகத் தரித்துநிற்க, அதிலிருந்து ஓர்அழகிய வாலிபரும், நடுவயசுள்ள ஓர்துரைசாணியும் வெளிகொள்ளவே, அவர்கள்வரவை எதிர்பார்த்திருந்த அவ்விளநங்கை முகமலர்ச்சியுடன் இருவரையும்வரவேற்று உள்ளேஅழைத்துச் சென்றாள். அங்கே அவர்கள் கால்மணிநேரம்வரையில் சம்பாஷித்ததன்மேல் மூவருமாக வெளிகொண்டு அங்குநின்ற மோட்டார் ரதத்திலேறினார்கள். ஏறியதும் ரதம் புறப்பட்டுப் பதமையாகச் சென்று நகரின்சுற்றாடலிலுள்ள அலங்காரமான ஓர்பெரிய மனைமுன்பாகப் போய்நிற்க, மூவரும் அதைவிட்டிறங்கினார்கள்.

அப்போது அம்மனையின்முன் காத்துநின்ற ஓர்பாட்டி புன்முறுவலுடன் அவ்வாலிபரை நோக்கி: "தம்பி! இந்தப் பெண்மணிதானா நீ சொன்ன அந்த நேர்ஸ் பிலோமினா?" என்று மிகுந்தபட்சத்துடன் வினவினாள். வாலிபரும்: "ஆம்பாட்டி, இவதான்" என்று விடையிறுத்தார். உடனே பாட்டி உள்ளன்புபெருகத் தனதுஇரு கரங்களாலும் அவளைவாரியணைத்துப் பெரிதும் அங்கலாய்ப்புடன் அவள் கன்னத்தில் ஓர்முத்தம்கொடுத்து: "வாபிள்ளை, வா" என்று கையிற் பிடித்து மெல்லமெல்லநடந்து உள்ளே அழைத்துச்சென்று ஓர் ஆசனத்தில் அமரச்செய்தனள்.

அதன்மேல் பாட்டி தனது பேரப்பிள்ளை ஆஸ்பத்திரியில் காயங் கட்டப்பட்டுக் கிடந்ததுமுதல் நிகழ்ந்த சம்பவம் முழுவதையும் ஆதியோடந்தமாய் அவள்வாயிலாகவே கேட்டறிந்துகொண்டாள். அப்போது அம்மாளிகையின் சோபிதகாட்சியும், அங்கு கண்டவைகளின் பெருமிதமாட்சியும் நேர்ஸ் பிலோமினாவுக்குப் போராச்சரியத்தை உண்டுபண்ணின. அன்று விருந்துக்கு அழைக்கப்பட்டிருந்தாரெல்லாம் அவளின் வீரத்துவசெயலை ஒரேமுகமாகப்பாராட்டி அவளுக்குச் சோபனங்கூறி நின்றார்கள். கடைசியாக விருந்துஆரம்பமாயிற்று. அஃது ஓர்இராசவிருந்தாகவே காணப்பட்டது. அவ்வேளை எல்லோரும் நேர்ஸ் பிலோமினாவுக்குப் புகழ்மாலை சூட்டியபடியே சந்துஷ்டியாக விருந்தருந்தினார்கள்.

நடுவிருந்தின்போது பீற்றர் சிறுகப் புன்னகையுடன் தன்தாயைவிழித்து: "அம்மா! நேர்ஸ்பிலோமினா எனக்குச் செய்யாமற்செய்த பேருபகாரத்துக்குத் தாங்கள் யாது கைம்மாறு செய்யப்போகிறீர்களோ?" என்று கனிவானகுரலில் மொழிந்தான். அதைக்கேட்ட அவன் தாயான சீமாட்டி: "மகனே! யாதுகைம்மாறு செய்யப்போகிறீர்களோ என்று கேட்கின்றாயா? ஆம், நான்சிறந்த ஓர்கைம்மாறுதான் செய்யவிருக்கிறேன். இந்தப்பெரியமனையையும், எனக்குச்சொந்தமான சகலசொத்துகளையுமே நேர்ஸ் பிலோமினாவுக்கு நிச்சயமாகக் கையளிக்கப்போகின்றேன்."

இதைக்கேட்டதே பந்தியமர்ந்திருந்தாரெல்லாம் பெரிதும்பிரமித்தவர்களாய்ச் சீமாட்டியின்வதனத்தை நோக்கினர். சிறிதுவேளை யாதாமோர் பேச்சுமின்றியே மவுனமாய் இருந்தனர். பீற்றரும் மிகுந்ததிகைப்படைந்தவனாய்ச் சிறிதுவேளை எதனையோ சிந்தித்துவிட்டுத் தாயை நோக்கி: "அப்போது அம்மா! அன்னை......" என்று மெதுவாகக்கூறினான்.

சீமாட்டி இதைக்கேட்டதே சிரித்துக்கொண்டு: "ஆம், மகனே! உன்னையுந்தான் நேர்ஸ்பிலோமினாவிடம் கையளிக்கப் போகிறேன். இத்தனை வருடகாலமும் ஒருஊதாரியாய்த் திரிந்து பெருமைவாய்ந்த எங்கள்குடும்பத்திற்கே பெரியஅவமரியாதையை உண்டுபண்ணினாய். அதனால் எங்கள் உள்ளம்மாத்திரம் அல்ல, இந்தஅழகிய இல்லமுமே கவலை என்னும் காரிருள் சூழ்ந்ததாய்க் காட்சியளித்தது. எங்கள்குடும்பவிளக்கு அணைந்துபோகாமல் நாங்கள் அருமையாகப் பெற்றெடுத்த ஒரேயொருபுதல்வனாகிய நீ துட்டர்சகவாசஞ்செய்து கெட்டழிந்துபோவதைக்கண்டு நானும், உன் தந்தையும் கவலையில்ஆழ்ந்து, கையெடாத கோவிலெல்லாம் கையெடுத்து, கண்ணீரையே தண்ணீராகப் பருகிவந்தோம். கடைசியாக உன் தந்தை கவலைமேலிட்டவராய்த் தீராப்பிணி கண்டு பாயும்படுக்கையுமாக வீழ்ந்து அந்தோ! மரணத்திரையில் மறைந்துவிட்டார். இந்தநிலைமையிலே உன்னை மனந்திருப்பி, நல்வழிப்படுத்தி எனது உள்ளத்தைக் களிக்கச்செய்த நேர்ஸ் பிலோமினாதான் உனதுவாழ்க்கைத் துணைவியாகி இந்த எங்கள்இல்லத்தையும், நீ ஓர்குலவிளக்காய் இருக்க வேண்டிய பெருமைவாய்ந்த எங்கள் குடும்பத்தையும் [illegible]

(தொடர்ச்சி [illegible]-ம் பக்கம்)

# யாசகியாக வந்த சதாசகாய மாதா

—: M. P. :—

(சென்றவாரத் தொடர்ச்சி)

அன்றுதினம் வழமையிலும் இருமடங்குசூப் குடித்ததையிட்டும், அந்தச்சூப் ஒருநாளுமே இல்லாதவிதமாய் அத்துணைருசியாய் இருந்ததையிட்டும் தாயும்பிள்ளைகளும் ஆச்சரியத்துடன் பேசிக்கொண்டார்கள். போசனஞ்செய்துமுடிந்ததும எல்லோரும் எழுந்துநின்று செபஞ் செய்தார்கள். அப்போது பிச்சைக்காரி நன்றிதெரிவித்துக்கொண்டு வெளியேபுறப்பட்டுச் செல்ல எத்தனித்தாள்.

அதைக் கண்ணுற்ற தாய் சன்னல் பக்கஞ்சென்று எட்டிப்பார்த்துவிட்டு, ஆகாயம் மப்பும்மந்தாரமுமாய் மழைக்குரிய அறிகுறிகள் காணப்படுவதை அவதானித்துப் பிச்சைக்காரியைநோக்கி, "அம்மா! இன்றிரவு நீ இங்கேயே தங்கியிருப்பது நன்று; ஏனெனில், சீக்கிரம் மழைவரும்போல் தோன்றுகிறது" என்று பரிவாகமொழிந்தாள். அவளும் மிகுந்தநன்றியறிதலுடனும், சந்தோஷத்துடனும் அதற்குச் சம்மதித்தாள்.

பின்னர் படுக்கைக்கு நேரமானபோது, சிறுபிள்ளைகளின் உடுப்புகளைக்களைந்து, அவர்களைப் படுக்கவைக்கவும், மற்றும் சில்லறைவேலைகளைச் செய்யவும் அந்தப்பிச்சைக்காரி கத்தறீனுக்கு ஒத்தாசைசெய்தாள். இவைகளையெல்லாம் கவனித்துக்கொண்டிருந்த தாய் அப்பிச்சைக்காரியின் நன்றியறிதலையும், பெருந்தன்மையையும், மேரைமரியாதையையுமிட்டுப் பெரிதும் வியப்படைந்தவண்ணமிருந்தாள்.

பிள்ளைகள் படுக்கைகளில் கண்ணயர்ந்ததும் தாய் கத்தறீனைஅழைத்துத் தனதுபடுக்கையைச் சித்தஞ்செய்து, அதில்சுத்தமான இரண்டொரு துப்பட்டிகளை விரிக்கும்படி சொன்னாள். அதன்மேல் பிச்சைக்காரியைநோக்கி, "அம்மா! இப்போது நீ அதில்படுத்து நித்திரைசெய்யலாம்; எனதுபடுக்கை எளிமையானதாய் இருந்தபோதிலும் சுத்தமாயிருக்கிறது; அதில் நீபடுத்து நல்ல நித்திரை செய்வாயென நம்புகிறேன்" என்றாள்.

இதைக்கேட்டபிச்சைக்காரி, "அம்மா! இதற்காக எனதுஇதயபூர்வமான நன்றியைத் தெரிவிக்கிறேன்; ஆயினும், உமதுபடுக்கையை எடுத்துக்கொள்ள நான்ஒருபோதும் சம்மதியேன்; அடுக்களையிலே அடுப்பண்டையிலே சிறுகவைக்கோலைப்பரப்பித் துப்பட்டிஒன்றுமாத்திரம் விரித்தால் போதும்; நான்நன்றாய் நித்திரைசெய்வேன்" என்று பணிவாக உரைத்தாள்.

அதற்கு அந்தவிதவை, "நான் இன்றிரவு துயில்கொள்ளப்போவதில்லை; ஏனெனில், நாளைக்குச் சனிக்கிழமை; நான் இருபத்துநான்குதொப்பிகள் பின்னிவைத்திருக்கிறேன்; அவற்றிலுள்ள குறைநிறைகளைச் சரிப்படுத்தி, போடவேண்டிய இரண்டொருதையல்களைப் போட்டுமுடிக்கத்தான் இரவெல்லாம் சரியாயிருக்கும்; சனிக்கிழமைதோறும் எனதுமகள்கத்தறீன் அவைகளைவிற்கக் கொண்டுபோவாள்; அவைகளெல்லாம் விற்கப்பட்டாலன்றி மற்றப்படி அடுத்தசனிக்கிழமைவரை எனக்கும், என்பிள்ளைகளுக்கும் சாப்பாட்டுக்குக் கஷ்டமாயிருக்கும்; ஆகவே, பொழுதுவிடியுமுன் நான் அந்தத் தொப்பிகளை ஒழுங்குபடுத்தவேண்டும்; நித்திரைசெய்ய ஒருநிமிஷநேரந்தானும் இருக்கமாட்டாது; அதனால் நீ கவலையின்றியே எனது படுக்கையிற் சந்தோஷமாகப்படுத்து நித்திரைசெய்[illegible] பட்சத்துடன் கூறினாள். அப்போதுபிச்சைக்காரி, "அம்மா! தாங்கள் மிகநல்லவர்கள்; தயாளசிந்தை நிறைவாகக் குடிகொண்டுள்ள உமதுஇதயத்தின் இயற்கையானநற்குணத்தால் தூண்டப்பட்டு இந்தப் படுக்கையை இன்றிரவு எனக்குவிட்டுக் கொடுக்கிறபடியால் நீர்கேட்கிறபடியே நான்அதிற்படுத்துறங்கத் தடையில்லை" என்றுசொல்லித் தன்னுடையதொப்பியையும், போர்வையையும் எடுத்து ஓர் பக்கமாகவைத்துவிட்டு, ஏனையஉடைகளுடன் செபிக்கிறபாவனையாய் இருகரங்களையும் குவித்துக்கொண்டு படுக்கையில் சரிந்து விரைவிலே அயர்ந்து நித்திரையாயினாள்.

படுக்கையிலே விரித்திருந்த துப்பட்டிகள் குளிரைத்தாங்கப் போதியனவாய் இருக்கமாட்டாவென்று நினைத்த அந்தஏழைவிதவை அவள்அயர்ந்துபோனதும் ஓர்அழுத்தமான நீலச்சமுக்காளத்தை எடுத்துவந்துவிரித்து அவளைப்போர்த்துவிட்டாள். பிறர்சிநேகத்துக்குரிய இந்தச்செயலை அவள்செய்கையில் அவள் பிச்சைக்காரியின் முகத்தை உற்றுநோக்கியபோது, அத்துணை சௌந்தரியமான வதனத்தை இதுகாலவரை தான் எங்கும் கண்டதில்லையென்று பிரமிப்புடன் தனக்குள் சொல்லிக்கொண்டாள். மேலும் அவளது கூந்தலின் நிறமும், பிரபையும் அவள் வதனத்தின் வசீகரத்தை நன்கு எடுத்துக்காட்டின.

நிற்க, விதவை சொன்னதுபோலச் சிறிதுவேளையால் காற்றோடுவந்தமழை கடுமையாகப் பெய்யத்தொடங்கியது. மின்னலும், முழக்கமும் அதிகமாயிருந்தன. பிள்ளைகள் அயர்ந்துவிட்டார்கள். அவ்விதவைமாத்திரம் விழித்திருந்து மின்னும்போதும், முழங்கும்போதும் சிலுவையடையாளம் வரைந்தபடியே தனது பின்னல் வேலையைச் செய்துகொண்டிருந்தாள். காற்று முன்னிலும்அதிகம் மும்முரமாய்வீசியது. முழக்கம் அதிகரித்துச் சூழவிருந்த குன்றுகளிலே எதிரொலிசெய்துகொண்டிருந்தது. அப்போதெல்லாம் அவள் திகிலடைந்தவளாய்ச் செபஞ்செய்வதும், பின்னல்வேலைசெய்வதுமாயிருந்தாள். சிலமணிநேரத்துள் மழையும் நின்றது. காற்றும் அமர்ந்தது. நீலவானிலே சந்திரன்தோன்றிச் சோதிமயமாகப் பிரகாசித்தது அப்போதும் அந்தஏழைவிதவை சன்னலில் உட்கார்ந்தபடியே தனது வேலையைச் செய்துகொண்டிருந்தாள்.

அவ்விதம் வேலைசெய்யும்போது நித்திரைமயக்கம் ஏற்படுமானால் சன்னலைவிட்டெழுந்து, கையில்விளக்கையெடுத்துப் பிடித்துக்கொண்டு பிள்ளைகள் துயில்கொள்ளும் ஒவ்வோர்படுக்கையையும் போய்ப்பார்வையிடுவாள் ஒரு பிள்ளையின் போர்வையை இழுத்துப் போடுவாள்; மற்றோர்பிள்ளையின்காதை மூடுவாள். வேறோர்பிள்ளையின் கால்களைமூடுவாள். அதன்மேல் சன்னலில் போய் உட்கார்ந்து பின்னல்வேலையைத் தொடர்ந்துசெய்வாள். திரும்பவும் தூக்கம்மேலிட்டால் அவள்எழுந்துபோய் பிள்ளைகளின் படுக்கைஒவ்வொன்றையும் பார்த்துக்கொண்டு வருவாள். அவ்வாறு பார்த்துக்கொண்டு வரும்போது பிச்சைக்காரிமேல் தான்போர்த்துவிட்டிருந்த சமுக்காளம் ஓர்பக்கத்தில் கிழிந்திருக்கக்கண்டு உடனேகுனிந்து மெல்லஅதைஎடுத்துவிட்டுப் பெட்டியில்தான் மடித்துவைத்திருந்த வேறோர்சமுக்காளத்தை எடுத்துவந்து அதுகொண்டு பிச்சைக்காரியைப் போர்த்துவிட்டாள். கடைசியாகக் காலை 5மணியாயிற்று. பொழுதும் புலர்ந்தது. பின்னல்வேலையும் பூர்த்தியாயிற்று.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமையான சகோதரங்களே!

மலாயாவின் சமஷ்டிஅரசாங்கத்தில் பினங்கு ஒருஉறுப்பாகும். அதன் பிரதமர் ஸ்ரீவொங் போவ் நீ. அவர்சென்ற ஆவணியில் அப்பதவியை அடைந்தார்.

ஸ்ரீவொங் போவ் நீ கிறீஸ்துவபாடசாலைச் சகோதரர் பினங்கில் நடாத்திவரும் அர்ச். சவேரியார் கல்லூரியில் மாணவராயிருந்தார். 1933-இல் கல்லூரிப் படிப்பை முடித்தபொழுது அவரை ஒருஉத்தியோகமும் காத்திருக்கவில்லை. வாழ்க்கை நடாத்த ஏதாவதுதொழில் பார்க்கவேண்டியிருந்தது. கிராமப்புறப் பாடசாலை ஒன்றில் ஆசிரியரானார். பின்விவாகஞ் செய்தார். அமைதிநிறைந்த வாழ்க்கையை எதிர்நோக்கினார்.

தூரகிழக்கில் யுத்தமுழக்கங் கேட்டது. யப்பானியபடை மலாயாவில்வந்து இறங்கினது. அது ஆசிரியர் வொங்கின் வாழ்க்கையைமாற்றியது. குடும்பத்தைக் காப்பாற்ற ஆசிரியத்தொழிலை நிறுத்திவிட்டு; பன்றிமேய்த்தார். வசதிகிடைத்ததும் தமது வகுப்பிற்கு வந்துவிட்டார்.

ஆசிரியத்தொழிலிற் பெற்றஅனுபவம் அவரை மேடைப்பேச்சாளராக்கியது. சீனப்பிராகிருத மொழிமூன்றுடன் ஆங்கிலமும் பேசுந்திறமை உள்ளவர். மலாய்மொழியும் தெரியும்.

மக்களுக்கேற்ற மந்திரி; படாடோபம் இல்லாதவர். ஆறுகுழந்தைகளுக்குத் தகப்பன் என்றதில் ஆனந்தங் கொள்ளுபவர். அவர்களுடைய கல்வியே அவரதுகவலை. எளியவாழ்க்கை நடாத்திப் பாமரமக்களின் அல்லல்களை அறிந்தவர்.

அவர் பக்திவைராக்கியம் நிறைந்த உத்தமகத்தோலிக்கர். அவர் ஏற்றிருக்கும் பதவிக்கு அவசியமான நேர்மை, விசுவாசம், அபிமானம் ஆதியாம்குண இலட்சணங்கள் கத்தோலிக்கசமய அனுட்டானத்தினாலேயே அவருக்குப் பொருந்தின.

ஸ்ரீவொங்கினது வாழ்க்கை அவரது விசாரணைப்பங்குடன் நெருங்கிச்சார்ந்தது. விசாரணைப்பங்கின் இயக்கங்களிற்கலந்து தமது மாகாணத்தில் கத்தோலிக்க இயக்கத்தை ஆரம்பித்துவைத்தார். புக்கித் மேர்டஜம் எனும் இடத்திலுள்ள அர்ச். அன்னம்மாள் திருசேத்திரத்திற்கு ஆண்டுதோறும் யாத்திரிகர்களை அழைத்துச் செல்கின்றார்.

அவரது வாழ்க்கை எமக்கு அரியபல உண்மைகளைப் படிப்பிக்கின்றது. அண்மையில் அரசியற்சுதந்திரம்பெற்ற ஆசியநாடுகளில் வொங்அவர்களை முதல்அமைச்சராக அடைந்திருக்கும் பினங்கு பேரதிஷ்டம் பெற்றதன்றோ.

அண்ணா.

—*—

# தாய்மாரின் உபகாரி

(தொடர்ச்சி)

எட்டுவருடங்களின்பின் ஜெரூட் திருமீட்பர்சபையிற் சந்நியாசியாய்ச் சேர்ந்தார். சந்நியாசமடத்தில் சகோதரருக்கு உடுப்புத்தைப்பார்; தோட்டஞ்செய்வார்; வாயிற்காப்போனுமாக ஊழியம்புரிவார். சில சமயங்களில் விசாரணைப்பங்குகளில் ஞானஒடுக்கம் போதிக்கும் குருமாருடன் கூடச்செல்வார். எப்போதும் ஏதோஒரு அற்புதஞ் செய்யாமலில்லை.

ஒருமுறை மொங்தே கார்கானோவுக்குச்சென்றார். தேவையான உணவுப்பொருட்களைப் பொதிக்கழுதைகள் செங்குத்தான மலைச்சாரல் வழியே சுமந்து வரும். அவைகளுக்குத் தீனிகொடுத்துப் பராமரிக்கச் செலவுஅதிகம். ஆயினும், சத்திரகாரன் அவருக்குக்கொடுத்த செலவுப்பட்டியல் அதிகப்படியான தொகையாயிருந்தது. "நான் சந்நியாசிகளுக்குக் கடும்விலை போடவில்லை" என்று மன்னிப்புக்கோருவதுபோற் கூறினான்.

"போடவில்லைஎன்றே எண்ணுகிறேன்" என மறுமொழிதந்தார் ஜெரூட். சட்டைச்சாக்கிலிருந்து காசை எடுத்துக்கொண்டு: "போட்டிருந்தால் உன்கழுதைகளுக்கேஆபத்து" என்றார்.

சத்திரகாரன் ஒன்றுங்கூறவில்லை. ஆனால், அந்நேரம் அவனுடைய மகள் வெயர்க்கக்களைக்க ஓடிவந்து "அப்பா, கழுதைகள் வலிவந்து இழுத்துக்கொண்டு கிடக்கின்றன; இறந்துபோகும்போ லிருக்கிறதே" எனக் குளறினாள்.

ஜெரூட் சகோதரருக்குக் காசு திரும்பிக்கிடைத்தது வட்டியுடன். "உங்கள்சுவாமிமார் பத்துப்பேரும் இங்கு தங்கிப்போகலாம். அறைகள் எப்போதும் ஆயத்தம். பயணத்துக்குத்தேவையான உணவும் இனமாகக் கொண்டுபோகலாம்; என்னுடைய கழுதைகளை மாத்திரங் காப்பாற்றிவிடும்" என்று சத்திரகாரன் கெஞ்சினான்.

ஜெரூட் அவனுக்கு மன்னிப்பு அளித்தார். கழுதைகளும் சுகம் பெற்றன. "ஏழைகளுக்குக் கடவுள் தாபரமாயிருக்கிறார் அண்ணே," எனக்கூறிச் சென்றார் நம்துறவி.

சிலமாதங்களின்பின் இன்னொரு சம்பவம் நடந்தது. நேப்பிள்ஸ்பட்டணத்திலிருக்கும்போது ஜெரூட் கடல்மேல் நடந்தார். மீன்பிடிஓடம் ஒன்று கோடைகாலச் சுழலில்அகப்பட்டது. ஓடத்தைச் செலுத்தியவர்கள் கரையில்நின்றவர்களை உதவிக்கழைத்தனர். ஏதுசெய்வதுஎன அறியாமல் யாவரும் திகைத்தனர். ஜெரூட்அவ்வழியாய்வந்தார். என்ன செய்யவேணுமெனத் துணிந்தார். சிலுவைஅடையாளம் வரைந்து கொண்டு, சந்நியாச உடையையும் கழற்றித் தோளில்போட்டுக்கொண்டு மத்தியதரைக்கடல்மேல் நடந்து ஓடம்நின்ற இடத்திற்குவந்தார். மாலுமிகளுக்கு ஒன்றுங் கூறாமல் முன்அணியத்திற்பிடித்து ஓடத்தை இழுத்துக்கொண்டு கரைக்குவந்தார். ஆனந்தம்நிறைந்த சனத்திரள் ஜெரூட்டை மகிமைப்படுத்த விரும்பிற்று. அவரைத் தேடிப்பார்த்தார்கள். காணவில்லை. அவர்களுடைய ஆரவாரத்தை ஏற்க விரும்பாமல் ஒருகடைக்குள் மறைந்துவிட்டார் நம் ஜெரூட்.

(தொடரும்)

—*—

# பிடிப்பான விளையாட்டுகள்

துரைஎன்றால் மிகவும்சாதுவான ஓர்பையன். அவன் எட்டாம்வகுப்பு மட்டும் படித்துக்கொண்டு வந்துவிட்டான். இதுகாலவரையிலே அவனைப்பற்றி ஆருமேஒருவிதமான முறைப்பாடும் ஆசிரியருக்குச்சொன்னதுகிடையாது. அவன் குணத்தில் நல்லவன்மாத்திரமல்ல, படிப்பிலும் மிகவும் தீரனாகவே இருந்தான். இதைக்கண்ட அவனது உடன் மாணவரெல்லாம் அவனிலே பொறாமையென்ற பொறாமையாகஇருந்தார்கள்.

ஒருநாள் துரை வீட்டைநோக்கிப் போய்க்கொண்டிருந்தான். வழியில் ஒருமரத்தின்கீழ் விளையாடிக்கொண்டிருந்த சிலதுட்டப்பிள்ளைகள் அவனைக்கண்டதுதான் சிக்காய்அடித்து, கூக்காட்டி, கைதட்டி, குளறி, நையாண்டிபண்ணத் தொடங்கிவிட்டார்கள். துரை அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலப் பொறுமையே விரதமாகக்கொண்டு ஒன்றும் பேசாமல் போய்க்கொண்டிருந்தான். இது அவர்களுக்கு இன்னும் அதிக பொறாமைத்தீயைக் கிளறிவிட்டது. அதனால், பின்னால்நின்று சிறுசிறுகற்களால் மளமளவென்று அவனுக்கு எறியத்தொடங்கிவிட்டார்கள். தற்செயலாக அந்தவழியால்வந்த அவனுடைய தகப்பனார் இதைக் கண்டுவிட்டார். மகன்அல்லவா? ஓடிச்சென்று வேலியில் ஒரு தடியை முறித்தார். ஒரேஅடியில் இதோ வேலைசாய்க்கிறேனென்று இருந்தது அவருடையஓட்டம். இதனைத் துரையும் கண்டுவிட்டான். அவர்களுக்கு என்னநடக்குமோ? சிலவேளை வாறாய் அடித்துப்போடுகிறாரோஎன்று நல்லாய்ப்பயந்துவிட்டான்.

உடனேஓடிச்சென்று தகப்பனைக் கட்டித்தழுவிக்கொண்டு இதென்னவேலை அப்பா செய்யத்துணிந்தீர்கள்? இவர்கள்அல்லோ என்பிரிய சிநேகிதர்கள். இவைகள் தான் எனக்குமிகவும் பிடிப்பான விளையாட்டுகள். அதுதான்அப்பா அவர்கள் இப்படிச்செய்தார்கள். எங்கள் யேசுஆண்டவரும் தம்மைச்சிலுவையில்அறைந்து கொன்றபொழுதிலும், அந்தக்கொடிய சத்துராதிகளாகிய யூதர்களுக்கு மன்னிப்பு அல்லவாகொடுத்தார். நானும் அவருடையபாதையில் நடந்துசெல்லத் தொடங்கிவிட்டேன். ஏன்அப்பா இதுஉங்களுக்குச் சம்மதமில்லையா? என்றான்.

இவ்வார்த்தைகள் பயத்தால்நடுங்கி ஓட்டமெடுக்க ஆயத்தமாகநின்ற அந்தத்துட்டப்பிள்ளைகளின் நெஞ்சில் பசுமரத்தாணிபோல் ஏறிவிட்டன. அச்சணமே அடித்த தென்றற்காற்றுடனேயே அவர்கள்துட்டத்தனமும் காற்றோடு காற்றாகப் பறந்துவிட்டது. சத்துராதிகளை நேசித்த அந்தப் பெருந்தகையை அவர்கள் தங்கள்இரண்டுகைகளும் எடுத்துக்கும்பிடாமல் வேறென்ன செய்வார்கள்? இதைக்கண்குளிரக் கண்ட தகப்பனார் பெற்றபொழுதிலும் பெருமகிழ்வுமாத்திரமாகொண்டார்? அன்று சாயந்தரம் துரைக்கு ஓர்நல்ல அன்பளிப்பும் செய்தார்.

— ஆனந்தம்

—*—

# சிரியாதேயுங்கள்!

பத்தியுள்ளபெண் ஒருத்தி ஒருநாள் அர்ச். பிரான்சீஸ் சலேசியாரிடம் புத்திமதி கேட்கச்சென்றாள். "சொண்டுக்குச் சிவப்புக்குழம்பு பூசுவதுபாவமா, இல்லையா?" எனக்கேட்டாள். சலேசியார் மூக்கில்விரல் வைத்து யோசித்தார். "சிலசுத்தவாளர்கள் அதை உபயோகிப்பதை முற்றாய்த் தடுக்கிறார்கள்; வேறுசில வேதபண்டிதர்கள் அப்படிச்செய்வதுபிழைஅல்ல என்கிறார்கள்." அதனால், நான் நடுநிலைமையைக் கடைப்பிடிக்கிறேன். அரைவாசிச் சொண்டுக்குப் பூசலாம்" என்றார்.

* * *

அல்பிறட்சிமித் நியூயோர்க் நகராதிபதியாகத் தெரிவுசெய்யப்பெற்றபின் உத்தியோகபூர்வமாகச் சிங்சிங் மறியற்சாலைக்குச் சென்றார். அன்று "முதற்கோணினால் முற்றும்கோணும்" என்றாற்போலிருந்தது அல்பிறட்சிமித்துக்கு. காலைக்கோப்பியைச் சரித்துவிட்டார்; நடக்கையில் தம்காலைச்சுளுக்கிவிட்டார். மறியற்சாலைக்குச் சென்றதும் பேச்சை முதலில்ஆரம்பிப்பது எப்படியெனத் திகைத்தார்.

"என் உடன்பட்டணத்தாரே" எனமறியற்காரரை விழித்தார்; மறியலில்இருக்கும்வரை மக்களுக்குக் குடிஉரிமை இல்லையென அவர்மனங் கூறிற்று. திரும்பவுந்தொடங்கினார்.

"என் மறியற்காரத்தோழரே...!" விளங்கிக்கொண்டவர்கள் கெக்கட்டமிட்டது சிமித்துக்குக் கோபத்தை மூட்டியது. எப்படி விழிக்கலாம் என யோசித்தார். ஈற்றில், "எப்படியாயிருந்தாலும், இத்தனை தொகையாய் உங்களைஇங்கு காணுவது எனக்கு அதிகமகிழ்ச்சியைக் கொடுக்கிறது" என்றார்.

---

உனக்குத்தானே ஞானியாயிராதே; தேவனுக்குப் பயந்துநட.

* * *

சகல துர்க்குணங்களுக்கும் ஊற்று சுயபட்சமே.

* * *

நீ பரலோகத்தில் உயர்த்தப்படவேண்டுமென்றால் பூலோகத்தில் உன்னைத் தாழ்த்திக்கொள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எல்லாரும் வீரர்

"எவருக்கும் அஞ்சாமல், அற்பழுக்கின்றி உத்தமகிறிஸ்தவனாக ஒழுகும் நல்லசிப்பாயும் நல்லகடற்படைவீரனும் தன்நாட்டின் திறமையான சேவையாளர்கள் என்பது நிச்சயம்," எனக்கூறினர் பரிசுத்தபிதா 12-ம் பத்திநாதர். மேலும் தொடர்ந்து கூறியதாவது, "எவராவது செபஞ் செய்ய அறியவிரும்பின் எப்பொழுதும் விரிக்கப்பட்டுள்ளதும் சிருட்டிகரின் பாரியஏடுமான கடலுக்குப் போகவேண்டும்."

* * *

அமெரிக்காவில் பலதிறப்பட்ட தபாற்தலைகளுக்கு முத்திரைகுத்தும் பொழுது "சமாதானத்துக்காக வேண்டிக்கொள்" எனும் சுலோகமும் பொறிக்கப்படுகிறது. அதைச் செய்யும்படி அரசாங்கத்தைத் தூண்டியவர் மிச்சிக்கனின்பிரதிநிதிலூயிஸ் றபவுட் அவர்களே. மூன்று. எட்டுச்சத (அமெரிக்க) முத்திரைகளில் உள்ள சுதந்திரச்சிலையின்கீழ் "கடவுளில் எமதுநம்பிக்கை" என்ற விருதுவாக்கியத்தைப் பொறிப்பித்தவரும் றபவுட் அவர்களே. அமெரிக்கா செய்யும் சத்தியப்பிரமாணவசனத்தில் "தேவஅதிகாரத்தின்கீழ்" என்ற வசனமும் சேர்க்கப்படக்காரணம் அவரே.

* * *

ஆங்கில வைத்தியபண்டிதர் மக்மூர்த்தி ஐம்பது வருடங்களாகக் கத்தோலிக்க மிசங்களிலுள்ள ஆபிரிக்கபழங்குடி மக்களுக்குச் சேவை செய்து இளைப்பாறுகின்றார்.

* * *

எழுபது வயதினரும் ஞுலுநீகிரோ சாதியைச் சேர்ந்தவருமான மாக்சிக்கர்கானு என்பவருக்கு எமது பரிசுத்தபிதா "திருச்சபைக்காகவும், பாப்புவுக்காகவும்" என்ற மகிமைப் பதக்கம் வழங்கியிருக்கிறார். அவருக்கு "சமாதானக்காரர்" என அடைமொழியும் வழங்குகிறது. அங்கு அண்மையில் மலேரியா பீடித்தமக்களில் மூந்நூறுவருக்கு ஞானஸ்நானங் கொடுத்தார்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1731**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

காரைநகர் களபூமி
சின்னக்குட்டி கந்தையா
— வழக்காளி.

எதிராக

யாழ்ப்பாணம், கொட்டடி
1. மருதன் நாகமுத்தவும்,
2. பெண் மாணிக்கமும்
— எதிராளிகள்.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1731-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் இரண்டுதுண்டுக் காணிகள் 1958-ம்ஆண்டு ஆவணிமாதம் 12-ந்திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிதொடக்கம் அந்தந்தக் காணிக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 5,905-உம், இன்னும் ரூபா 5,000-த்திற்கு 3-7-57 தொடக்கம், 5-12-57 வரையும் 12%வட்டியும், பின்பு கூட்டுத்தொகைக்கு இறுபடும்வரைக்கும் 100-க்கு 5%வட்டியும், கோட்டுச்செலவு 294 ரூபா 40 சதமும்.

### காணிகள் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் யாழ்ப்பாணப் பகுதி வண்ணார்பண்ணை கோயிற்பற்று, வண்ணார் பண்ணை தென் மேற்கிறை வெள்ளைசூரிதறையும்,வெள்ளைசூரிவயலும். ப.செ.இ.4-உம், கிணறும், வீடும், செய்பயிர் வான்பயிர்களும். எல்லை: கிழக்கு — றேட்டு. வடக்கு — நாகமுத்து மாணிக்கத்தின் ஆதனம். மேற்கு — வைத்தீஸ்வரன்கோவில் ஆதனம். தெற்கு — சின்னத்தம்பி டெண் எல்லுப் போலைக்கும், மறுபேருக்குமுரிய ஆதனம். இதடங்கலும்.

2. ஷை இறை வெள்ளைசூரிதறையும், வெள்ளைசூரிவயலும். செ. இ. 1 குளி $4\frac{1}{2}$ யும். இது உலாந்தாமேஸ்தர் ரி. கந்தையா என்பவரால் 1955-ம்ஆண்டு மார்கழி மாதம் 29-ந்திகதி 178-ம்இலக்கத்தில் விஸ்தரிக்கப்பட்ட அளவுபடத்தில் 1-ம் இலக்கத்தால் சுட்டப்பட்டதுண்டு. இரண்டு அறைகளும், பயிர்வகைகளும், மற்றும் அதற்குச் சேர்ந்தவைகளும். எல்லை: கிழக்கு — பண்ணை றேட்டு. வடக்கு—நாகமுத்து மாணிக்கத்திற்கும், பங்காளருக்குமுரிய ஆதனம். மேற்கு—வைத்தீஸ்வரன்கோவில் ஆதனம். தெற்கு — ஈடுவைத்தவர்களின் 1-ம்ஆதனம். குறித்தகாணியில் $1\frac{4}{5}$ குளியிலும் சிறுபிள்ளை மீனம்பிகையின் சகலஉரித்தும் உட்பட. இதடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், மதிப்பாளரும்.
24, சப்பெல் வீதி,
யாழ்ப்பாணம். 4-7-58

## நேர்ஸ் பிலோமினு

(6-ம்பக்கத் தொடர்ச்சி)

டியவள். ஆதலால் மகனே! அந்த மாதுநல்லாளுக்கு உன்னைக்கையளிக்க மனங்கொண்டேன். கடவுள் உங்களை ஆசீர்வதிப்பாராக" என்று அழுத்தமாகக் கூறினாள். இதைக்கேட்டதே பீற்றரும், பிலோமினுவும் நாணத்தினுல் தலைகுனிந்தார்கள். பந்தியமர்ந்திருந்த சீமான்கள், சீமாட்டிகள் எல்லாரும் அதுசரிதான்என்று சம்மதித்தவர்கள் போல் தலையை மெதுவாக அசைத்தார்கள். மூன்றுமாசங்களின் பின், முன்னர் அம்மூவரும் சந்திக்கநேர்ந்த சந்தானுள்கோவிலிலே இருவருக்கும் மங்கலகரமாகத் திருமணம் நிறைவேறியது. சுபம்!

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1697**

**யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டில்**

உரும்பிராய் வடக்கு
கார்த்திகேசு திருநாவுக்கரசு
அல்லது க. தி. இராசு
— வழக்காளி.

எதிராக

கோண்டாவில் வடக்குஅனுங்கை
ஆறுமுகம் பொன்னையா
— எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1697-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால் விபரிக்கப்படும் ஓர்துண்டுக்காணி 1958-ம்ஆண்டு ஆவணிமாதம் 9-ந்திகதி சனிக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தக்காணிக்குள்நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 3,428/75-உம், இன்னும் ரூபா 2,500-க்கு 20-6-57 தொடக்கம், 1-8-57 வரையும் 100-க்கு 9%வட்டியும், பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும்வரையும் 5%வட்டியும், கோட்டுச்செலவு 235 ரூபா 85 சதமும்.

### காணிவிபரம்

கோண்டாவிலிறை சந்திஒல்லையும், நிக்காளையும் ப. நி. இ. 5-உம், கல்வீடும், செய்பயிர், வான்பயிர்களும், தென்கிழக்கே இருக்கும் கிணற்றில் தண்ணீர்ப்பங்கும், வழிவாய்க்காலுரித்தும். எல்லை: கிழக்கு — சின்னையா கைம்பெண் செல்லாச்சிக்கும், பங்காளருக்குமுரிய காணி. வடக்கு — ஒழுங்கை. மேற்கு — நல்லதம்பி பெண் தங்கைச்சி அம்மாவின் காணி. தெற்கு — பொன்னுத்துரை பெண் இராசம்மாவிற்கும், பங்காளருக்குமுரிய காணி. இதடங்கலும்.

**செ. இரத்தினசபாபதி,**
கொம்மிஷனரும், மதிப்பாளரும்.
24, சப்பெல்வீதி,
யாழ்ப்பாணம். 4-7-58

# Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand Typists Examinations contact

**M. M. Thuraisingham.**

20, Third Cross Street,
Jaffna.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

**இல. M. B. 1342**

வண்ணார்பண்ணை கிழக்கு
சுப்பையா பொன்னம்பலம் கந்தையா
— வழக்காளி.

எதிராக

நம்-57 நாவாந்துறைறேட்டு,
சேகுசுல்தான் அப்துல்காதர்
சதக்கத்துல்லா
— எதிராளி.

யாழ்ப்பாண டிஸ்திறிக்கோட்டின் M. B. 1342-ம்இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி, பின்னால்விபரிக்கப்படும் பதினெரு துண்டுக் காணிகள் 1958-ம்ஆண்டு ஆவணிமாதம் 14-ந்திகதி வியாழக்கிழமை முற்பகல் 10மணிதொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள்நின்று பிரசித்தஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை: முதல்வட்டி ரூபா 1,318-உம், 19-11-56 தொடக்கம், 29-8-57 வரைக்கும் ரூபா 1,000-த்துக்குப் 12%வட்டியும், அதன்பின் முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை 5%வட்டியும், கோட்டுச்செலவு 193 ரூபா 42 சதமும்.

### ஆதனங்கள் விபரம்

வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி எழுதுமட்டுவாள் கோயிற்பற்று, எழுதுமட்டுவாள் தெற்கிறை "கொடிகாமத்தான்பனையும்," மறுபிரிவுகளும். ப. நி. இ 30-உம், பனைகளும், செய்பயிர், வான்புயிர்களும். எல்லை: கிழக்கு — முருகர் கைம்பெண் கண்ணுத்தையின் உரிமைக்காரருக்கும், யேசுதாசன் சாமுவேலுக்கும் உரியஆதனங்கள். வடக்கு — றெயில்றேட்டு. மேற்கும், தெற்கும் — அருளம்பலம் கந்தையாவின் ஆதனம். இதடங்கலில் சொரியலாய் நி. பர. $24\frac{1}{2}$-யில், சொரியலாய் அரைவாசியும், இன்னும் இடாப்பில்சொல்லிய 1—10 வரையும்உள்ள 10காணிகள்.

1. வடமாகாணம், யாழ்ப்பாணடிஸ்திறிக் தென்மராட்சிப்பகுதி, எழுதுமட்டுவாள்கோயிற்பற்று கரம்பகம்இறை "நனுவில்வயல்." ப. செ. இ. (25) இருபத்தைந்து. எல்லை: கிழக்கு — இன்னுசி சரசுவிற்கும், மறுபேருக்குமுரிய காணி. வடக்கு — மாணிக்கன் கந்தனுக்கும், மறுபேருக்குமுரிய காணி. மேற்கு — கீழே சொல்லப்படும் 2-ம்காணி. தெற்கு — சூசைபெண் நத்தாலியின் காணி. இது அடங்கலும்.

2. ஷை இறை "நனுவில்வயல்" ப. செ. இ. (25) இருபத்தைந்து. எல்லை: கிழக்கு — மேலேவிபரிக்கப்பட்ட 1ஆம் காணியும், சூசைபெண் நத்தாலியின் காணியும். வடக்கு — மாணிக்கன் கந்தனின் காணி. மேற்கு — நீக்கிலார் பாவிலுவிற்கும், மறுபேருக்குமுரிய காணி. தெற்கு — கிறிஸ்தி சூசைப்பிள்ளையின் காணி. இதடங்கலில் சொரியலாய் $\frac{7}{15}$ பங்கு. (பதினைந்தில் ஏழுபங்கு)

3. ஷை எழுதுமட்டுவாள் வடக்கிறை, "நனுவில் வயல்." ப. செ. இ. 50. இதில் நடுப்பெற வடக்குப்பக்கமாக உள்ள ப. செ. இ. $12\frac{1}{2}$. இந்த செ. ப. பன்னிரண்டரைக்கும் எல்லை: கிழக்கு — சந்தியா சின்னத்தம்பியின் காணி. வடக்கு — அந்தோனி நீக்கிலாருக்கும், பங்காளருக்கும் உரியகாணி. மேற்கு — மிருசுவில் ஊரெல்லை. தெற்கு — நாகன் வேலனின் காணி. இதடங்கலிற் சொரியலாய் $\frac{7}{15}$பங்கு. (பதினைந்தில் ஏழுபங்கு)

4. மேற்படி எழுதுமட்டுவாள்இறை "நனுவில்வயல்" பர. செ. இலா. 65 இதில் பர. செ. இல. $12\frac{1}{2}$. இந்த செ. பர. பன்னிரண்டரைக்கும் எல்லை: கிழக்கு—இன்னுசியார் சரசுவிற்கும் பங்காளருக்கும் உரியஆதனம். வடக்கு: காசிப்பிள்ளை பெண் சின்னப்பிள்ளை காணி. மேற்கு—அந்தோனிநீக்கிலானின்காணி. தெற்கு—பாவிலு கதிராமுவின் காணி. இதடங்கலிற் சொரியலாய் $\frac{7}{15}$பங்கு. (பதினைந்தில் ஏழுபங்கு)

5. ஷை இறை "நனுவில்வயல்" பர. செ. இலா. 50. இதில் சொரியலாய் மேற்குப்பக்கமாக பர. செ. இலா. 12. குறித்த செ. பர. பன்னிரண்டுக்கும் எல்லை: கிழக்கு—சுப்பர் நடராஜாவின் காணி. வடக்கு—பிரான்சிஸ்பிள்ளை அகஸ்தீனின்காணி. மேற்கு—மிருசுவில் ஊர் எல்லை. தெற்கு—வைத்தி பெண் ஆனுளின் காணி. இதடங்கலிற் சொரியலாய் $\frac{7}{15}$பங்கு. (பதினைந்தில் ஏழுபங்கு)

6. ஷை இறை "நனுவில்வயல்" பர செற். இலா. 36. இதில் பர. செற். இலா. 13. குறித்த செற். பர. பதின்மூன்றுக்கும் எல்லை: கிழக்கு — கரம்பகம்ஊர் எல்லை. வடக்கு — சந்தியா சின்னத்தம்பியின் காணி. மேற்கு — கந்தர் பேதுருவின் காணி. தெற்கு — வைத்தி பிலிப்புவின் காணி. இதடங்கலிற் சொரியலாய் $\frac{5}{17}$ பங்கு. (பதினேழில் ஐந்துபங்கு)

7. ஷை இறை "நனுவில் வயல்" பர. செற். இலா. 12. இந்த செற். பர. பன்னிரண்டுக்கும் எல்லை: கிழக்கு — அந்தோனி நீக்கிலாருக்கும், பங்காளருக்குமுரிய காணி. வடக்கு — இன்னுசி சரசுவிற்கும், பங்காளருக்குமுரிய காணி. மேற்கு — பேதுரு கைம்பெண் ஆனுளின் காணி. தெற்கு — தம்பையா பெண் பொனனுச்சியின் காணி.

8. ஷை இறை "நனுவில் வயல்" பர. செற். இலா. ஐம்பது. (செற் பர. 50)க்கும் எல்லை: கிழக்கு — சந்தியா சின்னத்தம்பிக்கும், பங்காளருக்குமுரிய காணி. வடக்கு — காசித்தம்பி பெண் சின்னப்பிள்ளையின் காணி. மேற்கும், தெற்கும் — மிருசுவில் ஊர்எல்லை. இதடங்கலிற் சொரியலாய் எட்டில் ஒன்று ($\frac{1}{8}$பங்கு)

9. ஷை கோயிற்பற்று மிருசுவிலிறை, "நனுவில் வயல்" பர. செற். இலா. $9\frac{1}{2}$. இதில் செற். பர. மூன்றரைக்கு (செற். பர. $3\frac{1}{2}$) எல்லை: கிழக்கு — தம்பையா பெண் பொன்னுச்சிக்கும், பங்காளருக்குமுரிய காணி. வடக்கு — சின்னத்தம்பி வேலாயுதருக்கும், பஙகாளருக்கு முரிய காணி. மேற்கு — வைத்தி பிலிப்பனின் காணி. தெற்கு — அந்தோனி பெண் மரியைக்கும், மறுபேருக்குமுரிய காணி. இதடங்கலிற் சொரியலாய்மூன்றில் ஒருபங்கு ($\frac{1}{3}$பங்கு).

10. மேற்படி எழுதுமட்டுவாள் தெற்கிறை "நனுவில்வயல்" பர. செ. இ. $9\frac{1}{2}$. இதில் ப. செ. இ. ஆறு (6)க்கும் எல்லை: கிழக்கு—அந்தோனி பேதுருவின்காணி. வடக்கு—சின்னத்தம்பி வேலாயுதரின் காணி. மேற்கு—வயித்தி பிலிப்புவிற்கும் பங்காளருக்குமுரியகாணி. தெற்கு—கரம்பகம் ஊர்எல்லை. இதிற் சொரியலாய் மூன்றில் ஒன்று ($\frac{1}{3}$ பங்கு.)

**தி. ந. ஆசீர்வாதம்,**
கொம்மிஷனரும், விலைமதிப்பாளரும்.
நம். 21, 2-ம்குறுக்குத்தெரு,
குருநகர், யாழ்ப்பாணம்.
5-7-1958

## GOVT. TENDERS

**Jaffna Kachcheri**

N2341—Toll Rent, Kerativu-Sangupiddy Ferry Service 1958/59. Closing date for tenders 5-8-58. For full particulars see Govt. Gazette of 4-7-58.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, July 10-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org